உ
முருகன் துணை.

விவேகபாநு

ஒரு இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"—திருக்குறள்.

ஆசிரியன்:—எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை

"நன்மை கடைப்பிடி" "நாடொப்பன செய்" "உத்தமனாயிரு"

மாலை—க. விபவஞு புரட்டாசிமீ 1928ஞு செப்டம்பர், அக்டோபர்மீ மலர்—ரு.

கடவுள் வணக்கம்

பதிபூசை முதலநற் கிரியையான் மனமெனும்
பசுகரண மீங்க சுத்த
பாவனை யறச்சுத்த பாவனையி னிற்குமெய்ப்
பதியோக நிலைமை யதனன்
மதிபாச மற்றறி னடங்கிடு மடக்கவே
மலைவின்மெய்ஞ் ஞான மயமாய்
வரவுபோக் கற்றநிலை கூடுமென வெனதுளே
வந்துணர்வு தந்த குருவே
துதிவாய்மை பெறுசாந்த பதமேவு மதியமே
துரிசறு சுயஞ் சோதியே
தோகைவா கனமீ திலங்கவரு தோன்றலே
சொல்லரிய நல்ல துணையே
தகிபெறுஞ் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (5)

ஷண்முகர் பாட்டு

(வரகவி-திரு. அ. சுப்பிரமணிய பாரதியார்)

(மெட்டு—மோடி)

ஷண்முகம்—ஷண்முகம்—ஷண்முகம்—ஷண்முகம்
ஷண்முகம் சிவ—ஷண்முகம்

1 சரவணப்பூம் பொய்கையிலே
கருணையொடு வந்தசுரர்
மரபழிய வேல்விடுத்த (ஷண்முகம்)

2 உலகமெலாம் ஒருநொடியில்,
வலம்வந்து மலைப்பழனித்
தலமிருந்து நலமுதவும் (ஷண்முகம்)

3 பூதலமும் மீதலமும்,
போற்றிசெயப் போரூரில்
நாதனென வந்தசிவ (ஷண்முகம்)

4 வேலன் குகன் சீலன் சிவன்,
பாலனெனப் பாடித்தொழச்
சோலைமலை மேலமர்ந்த (ஷண்முகம்)

5 கரங்குவித்துச் சிரங்குனிந்து,
கமலமலர்க் கழல்பணியப்
பரங்குன்றில் விளங்குஞ்சிவ (ஷண்முகம்)

6 நேமமொடு நினதுதிரு,
நாமம்நவில் வார்க்கருளச்
சாமிமலை மேவுஞ்சிவ (ஷண்முகம்)

7 கந்தன்சிவ காமியுமை,
மைந்தனெச் சந்ததமும்
சிந்தைசெயச் செந்திலமர் (ஷண்முகம்)

8 வேதனுக்குச் சிறைவிதித்து,
நாதனுக்கு மறையுரைத்துப்
போதகுரு வானசிவ (ஷண்முகம்)

9 வரகவிசுப் பிரமணியன்,
தருமினிய தமிழ்க்குகந்து
அருள்புரியுந் திருத்தணிகை (ஷண்முகம்)

இன்பதுன்பம்

சகோதர சகோதரிகாள்!

சர்வ வல்லப தயாபர மூர்த்தியின் பெருங் கருணையா லுதித்த மானிட வர்க்கத்தினர்க்கெல்லாம், தாயின்வயிற்றி லவதரித்தபொழுதே இன்பமும், துன்பமும் உண்டாயின. அவ்விருவகைகளையும் நாம் அனுபவிக்க ஏற்பட்டிருக்கின்றோமெனினும்,ஒவ்வொருவரும் ஏககாலத்தில்இன்பத்தையும், துன்பத்தையும் சேர்த்தனுபவித்தல் முடியாதகாரியம். இவ்விரண்டின் அனுபவமும் மாறிமாறி வரும். இன்பதுன்பமாகியஇரண்டும் இப்பிறப்பில் நம்மால்தேடிக்கொண்டவையல்ல. முன்செ.மத்தில் அவரவர்கள் செய்த பாப புண்ணியங்களுக்கேற்ப இச்சென்மத்தில் அனுபவிக்கவந்து அவை சேர்வன வாகும். முன்சென்மத்தில் ஒருவன் புண்ணியவானா யிருந்திடில் இச்சென்மத்தில் அவனுக்கு செல்வமுண்டாகும். செல்வமிருந்திடில் இவ்வுலகில் சலக போகபாக்கியங்களுமுண்டு. பொருளில்லாவிடில் உலகவாழ்க்கையில் இன்பமில்லை. இது நிற்க. இனி துன்பத்தைப்பற்றி சிறிது ஆராய்வோம்; ஒருவன் முற்பிறப்பில் பாவங்களைச் செய்திருந்தால் அவனுக்கு இச்சென்மத்தில் துக்க முண்டாகும். "இன்ப துன்பம்" என்னு மிரண்டுமே சுகதுக்க மெனப்படும். சுகமும் துக்கமும், நாம் இந்த சென்மத்தில் தேடிக்கொண்டவையல்ல வென்பதை,—

"முந்து சென்மமே புண்ணிய மிகுந்திடில்
முக்கியம் செல்வம துண்டாகும்
முந்து சென்மமே பாவமே மிகுந்திடில்
முழுமையும் துக்கம துண்டாகும்
அந்த ரண்டையு மொழித்திடில் பிறப்பில்லை
அரன்கழல் துணையாகும்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமி... நூல் நிலையம், சென்னை-60009...

பந்த மானதோர் வேதங்கள் புராணங்கள்
படைத்ததை யறிவீர்கள்."

என்னுமிப்பாவினுல் உணரலாம்.

இம்மானிலத்தில் அவதரித்த மனிதர்கள் யாவரும் இன்பத்தைக் கரும்பென்றும், துன்பத்தை வேம்பென்றும், கருதியே இன்பத்தைப் பெற எண்ணுகிருர்கள். அங்ஙனம் பெறுதற்குப் பொருள்வேண்டும். பொருளில்லையேல் "பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை" என்றபடி இப் புவியில் சகல போக பாக்கியங்களையும் அனுபவித்தல் இயலாது. இத் தகைய பொருளுண்டாவதற்குப் புண்ணியஞ் செய்யவேண்டும். இந்த சென்மத்தில் புண்ணியஞ் செய்தால் அடுத்த சென்மத்தில் பொருள் சேர அதனுல் இன்பமும் கைகூடும்; இனி மேலுலகத்தில் இன்பமடைய வேண்டுமானுல் அருள் வேண்டும். "அருளில்லார்க் கவ்வுலகமில்லை" என்றபடி இந்நிலவுலகில் எவ்வளவு சிறப்புற்று வாழ்ந்தாலும் அருளுடனிருந்து பகவானருளைச் சம்பாதிக்காவிட்டால் மோட்சசாம்ராஜ்யத்தை இழப்போமென்பது திண்ணம். இவ்வருளுக்கும் பொருள் உதவியாகும். இப்பூமண்டலத்தில் பொருளிருந்தால் தானதருமங்களைச்செய்து பகவானருளைப் பெறுவதோடு, இன்பத்தையும், புண்ணியத்தையும், கீர்த்தியையும், எண்ணிய காரியசித்தியையும், கதிபெறும் வழியையும், தேடிக்கொள்ளலாம்; இதனை,—

"பொருளிலார்க் கின்ப மில்லை. புண்ணிய மில்லை; யென்று
மருவிய கீர்த்தி யில்லை; மைந்தரிற் பெருமை யில்லை;
கருதிய கருமமில்லை கதிபெற வழியு மில்லை;
பெருநிலந் தனிற்சஞ் சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே."

என்னும் இப்பாடலினுல் உணரலாம். திருஷ்டாந்தமாகப் பொருளில்லாதவன் தனக்குப் பிண்டத்திற்குத் திண்டாடுவது கண் கூடாக கண்ட விஷயமன்றோ?

இக்கருத்துகளை யெல்லாம் ஒருவாறு இம்மாநிலத்தில் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் வாசியுங்கள்! ஆழ்ந்து யோசியுங்கள்! நான் சொல்லும் கருத்துப் பார்க்குமளவில் புலப்படாமற் போகாது. உலக வாழ்க்கையில் இன்பத்தைத் தரும் பொருளானது பணம் அல்லது, திரவிய மெனினும் பொருந்தும். எல்லையற்ற இன்பத்தைத்தரும் பொருளான "செல்வம்" எக்காலமும்,ஒருவரிடமும் நிலைபெற்றிராமல் சகடக்

கால் போன்று சுழல்வதாகின்றது. இச்செல்வத்தை ஒரு இன்பமாக மதிக்கலாமா?

"சிறப்பும் செல்வமும் பொருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினு மடைகுவர்
குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந்து ஒரூர் நண்ணினு நண்ணுவர்."

என்ற மேலோர் வேதவாக்கை அகத்திலுன்னிப் பாருங்கள்! செல்வத்தை நாம் படைத்தோமே யன்றிச் செல்வம் நம்மைப் படைக்கவில்லை. அச்செல்வத்தை நாம் பிறக்கும் பொழுது கூடவே கொண்டுவரவில்லை.

"பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை
பிறந்து மண்மேல் இறக்கும்பொழுது கொடுபோவதில்லை
* * * *"

என்று பட்டினத்துச் சுவாமிக ளியற்றியுள்ளபடி இடைநடுவில் உண்டான செல்வத்தை பெரிதென மதிப்பது எவ்வளவு மதியீனம்? வானத்தின் மின்னலைப்போல் தோன்றி மருங்கறக்கெடும் திரவியத்தைச் சதமென்று நம்பாதே யுங்கள்! அரிதினு மரிதாகிய மானிட சென்மமெடுத்த ஒவ்வொருவரும், ஜீவன்களிடத்தில் அன்பும், ஆதரவும், தருமசிந்தனையும், பரோபகாரமு முடையவர்களா யிருந்து புண்ணியத்தைக் கைக்கொண்டு கடவுளுக்கு அன்புடையவராய்ச் சர்வ கருணாநிதியாகிய எம்பெருமானின் திருவருளைப் பெற்று மறுசென்மத்தில் மிக்க ஐஸ்வரிய முள்ளவரா யவதரித்து இன்பமென்னும் கனியைப்புசிக்க, இச்சென்மத்தில் இன்பமாயினும் சரியே, துன்பமாயினும் சரியே, துன்பத்தையும் இன்பமாகக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து சித்தி முத்தி பெறுவீர்களாகுக. சுபம்! சுபம்!!

திருவருட் சகாயம்.

அன்பர்களே! உங்களிருப்பிடம் நாடி, அன்புடன் தேடி, நுங்கள் கரத்தமர்ந்து விளங்கும் "விவேகபாநு"வின் வருடச் சந்தா ரூபாய் ஒன்றும் அனுப்ப ஏன் தாமதப்படுத்துகிறீர்கள்? இனியேனும் பாநுவின் சந்தாவை அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

கைத்தொழில்

—◈—

மூப்பத்து மூன்றுகோடி ஜனத்தொகையுள்ள நமது இந்துதேசமானது சுமார் 150 ஆண்டுகட்கு முன்னர் கைத்தொழிலில் மிகச்சிறந்து விளங்கிற்று. அக்காலத்தில் இந்து தேசத்திற்கு வேண்டிய சாமான்களை நமது தேசத்திலேயே நம்மவர்களால் தயார் செய்து வரப்பட்டது. இதுபோழ்து இந்தியாவில் கைத்தொழில் இல்லாமற் போய்விடவே எந்த சாமானும் சீமையிலிருந்து வந்துவிடுகிறது. இதனால் நம்மிந்தியர்கட்கு வேலையின்றித் திண்டாடவும், பிச்சை யெடுக்கவும், கூலிவேலை செய்யவும், சேவகம் செய்யவும், இரங்கோன், பினங்கு, சிங்கப்பூர், சிலோன் முதலிய பிரதேசங்கட்குச் செல்லவும் ஆயிற்று. நமது நாட்டில் நம்முடன் பிறந்த சகோதரர்கள் பிறநாடுற்று ஆங்குபடும் கஷ்டங்கள் செப்புந் தரத்ததோ?

இதைக் கவனித்து தக்கது செய்து இந்தியாவில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் செல்வரைக் காணோம், பரோபகாரிகளைக் காணோம். ஒரு ரூபாய்க்குப் பஞ்சை அன்னிய நாட்டினரிடம் விலைக்கு விற்றுவிட்டு, அதை அவர்களால் துணியாக நெய்து அனுப்பப்பட்ட பிறகு பத்து ரூபாய் விலைகொடுத்து வாங்கும் அவிவேகிகளாக வன்றோ யிருக்கின்றோம். நமது மதியீனத்தை என்னென் றியம்புவது! அந்தோ! வெட்கம்! வெட்கம்!! அன்னியர் நம்மை ஒருமனிதக் கூட்டத்தினராக நினைப்பார்களா? நாம் நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கஷ்டப்பட்டு பொருளைத்தேடி அன்னிய நாடுகளுக்கு அனுப்பிவிட்டு நித்திய தரித்திரர்களாய் வாழ்ந்து வருவதும், பசி, பிணி, பஞ்சம் முதலியவற்றி லகப்பட்டுழலுவதும் தலைவிதியோ?

இனியேனும், எந்த சாமானுக்கும் அன்னிய நாடுகளை எதிர்பார்த்திராமல், நம் நாட்டிலேயே பல சாமான்களை யுண்டுபண்ணும் கைத்தொழிற் சாலைகள் பல தோன்றினால்; அதனால் பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்குப் பிழைப்புண்டாகி; நம் நாட்டு மக்கள் அன்னிய நாட்டு சாமான்களுக்கு எதிர் பார்க்காமல் சுகமே வாழலாமென் பதைப்பொருளுடையோர் கவனித்து, இந்தியாவில் கைத்தொழில் அபிவிருத்தி யடையவும், அதற்குத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவும் வேண்டுகிறேன்.

(வி-பா; ஆ- ர்.)

:: அருள் வேண்டல் ::

சென்னை, தொண்டைமண்டலம் பாடசாலைத் தமிழ்க்கழகம்

கௌரவகாரியதரிசி

வ. ஏகாம்பரன் எழுதியது

சீரார் கடம்பணி செவ்வேள்நின் சேவடி யென்னுளத்தே
ஆரார் வமென்னும் தளையாலிங் கார்த்திடக் கட்டிநின்மா
பேரா யிரமெடுத் தோதிடப் பேரணித் தெள்ளமுதே!
நேரார் தனித்தமிழ் எற்கீந் தெனவெதிர் நின்றருளே! (1)

சேற்றினில் வீழ்ந்த கரிபோல மாயையிற் சிக்குண்டுநின்
பாற்றிரி சிந்தை பதித்துனைப் பாடிப் பணிகின்றிலேன்!
ஆற்றில னெந்தப் பணியும்நின் னாடிக் கேயடியேன்!
போற்றில னின்னைப் புகழேனென் குற்றம் பொறுத்தருளே! (2)

வானோர் தமைப்புரந் தேமுன்பு வாழ்வித்த மான்மருகா!
ஏனோ நினக்கென்றன் மேல்வர்மம் நீபுவிக் கேற்றதந்தை
நானோநின் பிள்ளைகளிலோர் மதலை தணிகையனீ
தானோர் அமுத மொழியெனக் கேசொலின் தாழ்மையென்னே!

சந்தப் பொலிவுறு வெண்பா அகவனற் றுழிசைப்பா
சிந்தைக் கினிய கலிப்பா விருத்தம் திகழ்வஞ்சிப்பா
இந்தப் பலபா வினைநா னியம்ப எளியனுக்குக்
கந்தப் பனேநின் னருட்பா லளித்தெனைக் காத்தருளே! (4)

வாகை நறுமலர்த் தாமந் திகழ் வளர்புயனே!
தோகை மயிலில் வருவாய் துகள்தவிர் நற்குமரா!
ஓகை பெருகி அடியேன் உனதடி பாடிடவே
நீகை விடாம லெனக்கருள் தந்தென்முன் நின்றருளே! (5)

கஞ்சமிகரித யத்தன்பு மல்கக்கண் ணீர்சொரிய
விஞ்சு துதியினை வாய்பாட மேவுகை கூப்பவெஃகி
வஞ்சந் தவிர்க்குநின் பாதத்தை நாளும் வணங்கிடவே
அஞ்சக் கரத்தன் புதல்வா அறிவுதந் தாண்டருளே! (6)

பெய்யா னதிநெறி பொன்றிட வேயெந்த நாளும்பொன்று
மெய்யாம் பெருநெறி யான்மேவி உய்ந்து விளங்குதற்கே

அய்யா தணிகைய மர்கின்ற ஆறு முகத்தவனே
செய்யா திருவருள் செய்வாய் துணைநின்றன் சேவடியே. (7)

சீரணி வெண்ணீ றொளிர் நுதலாறுந் திகழ்முகமும்
தாரணி மார்பமும் திண்டோளும் தாமரைத் தாள்களுமோர்
வாரணி வேலும் திருமயில் வாகன முங்கொடியும்
பேரணி நின்புக ழுங்கொண் டெனுள்ளம் பிறங்கிடுமே. (8)

தண்ணார் தணிகை யெனுநற் றலத்தினிற் சார்பன்னிரு
கண்ணா ரருள்மொழி யும்புயலே அமுதத் தமிழ்சேர்
பண்ணால் நினதடி பாடிப்பல காலும் நின்னெழுத்தை
அண்ணா மறவாதிருக்க மருந்தளித் தாளுதியே. (9)

பண்டை வினைபறந் தோடிட நின்மலர்ப் பாதங்கண்டே
தண்டம் புரியுமென் கைகம்ப வாய்மொழி தான்குழறக்
கண்ட வொளிக் கண்கள் நீர்பாய்ச்ச நின்றன் கருணையமு
துண்டு பரவச மெய்திட வென்முன்பு தோன்றுவையே. (10)

ஹாஸ்யத்துணுக்கு

கலப்பற்ற தமிழ்மொழி

தமிழுடன் இதர பாஷையைக் கூட்டிப் பேசக்கூடாதெனப் பெரிய கூட்டத்தில் நீண்ட பிரசங்கம் செய்த ஒருவர் இடை இடையே "நான் எந்த (கம்யூனிட்டி)யையும் பற்றிக் குறைகூறவில்லை. என் வார்த்தையில் எப்படிப்பட்ட (கம்யூனிட்டி)க்கும் அபிப்பிராய பேதம் உண்டாது" என்று பேசிக்கொண்டே போகையில், வயதுசென்ற கிழவர் ஒருவர் திடீரென்றெழுந்து ஐயா பிரசங்கியாரே! இந்தக் கூட்டத்தைப் பார்த்துப் பலமுறை (கம்மினாட்டி! கம்மினாட்டி!) என்று சொல்வதால் நீரும் (கம்மினாட்டி)யாகவே இருக்கவேண்டுமென்பதை மறந்தீரோ வென்று கேட்க, ஓகோ! தமிழ்ப் பதங்களோடு (கம்யூனிட்டி) என்ற ஆங்கிலபதத்தைச் சேர்த்து தமிழுமல்லாமல், ஆங்கிலமுமல்லாமல் குளறிக்கொட்டியதால் இந்தப்பட்டம் வாய்த்ததென்று பிரசங்கியார் வாயை மூடிக் கொண்டாராம். (பா-வி)

:: ஆராய்ச்சிப்பகுதி ::

பாண்டிய மன்னர்களின் சிறந்த ஆட்சி

[இது சென்னை "இந்தியன் ரெவியூ" பத்திரிகையில் ஸ்ரீமான் வி. ஜி. ராமகிருஷ்ணய்யர் எம். ஏ. எல். டி. எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு.]

தற்காலம் நமக்குக் கிடைத்துள்ள சரித்திர சம்பந்தமான ஆதாரங்களையும், சாதனங்களையும் கொண்டு பாண்டிய நாட்டைப்பற்றியும், அங்கு வசித்துவந்த ஜனங்களைப் பற்றியும் ஆராய்ச்சிசெய்து பார்த்தால் தமிழர்கள் புராதனமான காலம் முதல் பாண்டிய நாட்டில் வசித்து வந்தார்களென்றும், நாகரிகத்திலும் மற்ற விஷயங்களிலும் அவர்கள் மிகவும் உயர்ந்த நிலைமையிலிருந்து வந்தார்களென்றும் நன்கு விளங்குகின்றது. பாண்டி நாட்டு மன்னர்களின் கீழ் வாழ்ந்துவந்த தமிழர்களின் நாகரிகத்தைப் பற்றியும், மற்ற விஷயங்களைப் பற்றியும் நாம் ஈண்டு ஆராய்வோம்.

பண்டைப் பாண்டிய மன்னர்களின் பெருமை

பண்டை நாட்களில் பாண்டியநாட்டை ஆண்டுவந்த அரசர்கள் சாதாரணமான அரசர்களன்று. பாண்டிய நாட்டை ஆண்டுவந்த மன்னர்களில் சிறந்த அறிவுடையவர்களாகவும், ஞானமுடையவர்களாகவும் இருந்து வந்ததுமன்றி, தங்களது நாட்டின் கல்வி அபிவிருத்தியில் மிகவும் கவனம் செலுத்தி உழைத்து வந்தார்கள். கல்வியை வளர்ப்பதிலும், சிறந்த வித்வான்களையும், அறிஞர்களையும், ஆதரிப்பதிலும் நமது பண்டைப் பாண்டிய மன்னர்களுக்கு இணையாக வேறு எவரும் இருந்ததில்லையென்றே கூறலாம். தென் இந்தியாவில் பண்டைப் பாண்டிய மன்னர்கள் பலபெரிய கோபுரங்களையும், தேவாலயங்களையும் கட்டியிருக்கின்றார்கள். தாங்கள் ஆண்டுவந்த நாட்டின் பல பாகங்களிலும் அவர்கள் பல கால்வாய்களையும் குளங்களையும் வெட்டியிருக்கின்றார்கள். பொதுஜனங்களின் நன்மையைக் கருதி அவர்கள் மற்றும் அநேக காரியங்களைச் செய்திருக்கின்றனர். பாண்டிய மன்னர்களால் பாண்டிய நாட்டில் கட்டப்பட்டுள்ள பெரியகோயில்களையும், அந்த தேவாலயங்களுக்குஅவர்களால்விடப்பட்டுள்ள ஏராளமான மான்யங்கள்

சொத்துகள் இவைகளையும் உற்றுநோக்கும் பொழுது பண்டைப் பாண்டிய மன்னர்கள் அளவுகடந்த செல்வமுடையவர்களாக இருந்து வந்தார்களென்றும், தேசத்தின் நன்மையைக்கருதி அவர்கள் தங்களது செல்வத்தைப் பல சிறந்த காரியங்களைச் செய்வதில் செலவிட்டிருக்கின்றார்களென்றும் நமக்கு நன்கு விளங்கவில்லையா? பாண்டிய மன்னர்களில் பலர் தங்களது காலத்தில்பெரும்பான்மையான காலத்தை நாடுகளைஜெயிப்பதிலும், தங்களது எதிரிகளுடன் போர்புரிவதிலும் காலங்கழித்து வந்தபோதிலும், அவர்கள் தங்களது நாட்டின் அவசியத்தையும்,ஜனங்களின் நன்மைகளையும் கவனிக்காமல் விட்டுவிட்டதாகத் தெரியவில்லை.

பாண்டிய அரசாங்கத்தின் நிலை

பாண்டிய அரசர்களுக்கு உதவியாக அமைச்சர்கள், இராஜதந்திரிகள், சேனாதிபதிகள், வேவுகாரர்கள் முதலியவர்கள் இருந்துவந்தனர். அரசன் தனது நாட்டின் விஷயங்களைப்பற்றி தனது அமைச்சர்களின் சபையில் தான் யோசனை செய்வது வழக்கம். சில சிலாசாஸனங்களிலிருந்து, பண்டைப் பாண்டிய மன்னர்களின் காலத்தில் நிலவரி எப்படி வசூலிக்கப்பட்டு வந்ததென்றும், பொதுஜன நன்மையைக் கருதிய செலவுகளெல்லாம் அரசாங்கத்தில் எப்படிச் செலவு செய்யப்பட்டு வந்தன வென்றும், பாண்டிய நாட்டின் வியாபாரமும் வாணிபமும் எப்படி நடைபெற்று வந்ததென்றும், நகருக்குரிய ஸ்தாபனங்களும், இராணுவத்திற்குரிய ஸ்தாபனங்களும் அரசர்களால் அக்காலத்தில் எப்படி அமைக்கப்பட்டிருந்தன வென்றும் நன்கு விளங்குகின்றது. ஆனால் பாண்டிய நாட்டிலிருந்து வந்த அரசாங்கம் அப்பொழுது எப்படி இருந்து வந்ததென்பதைப்பற்றியே பல அறிஞர்களுக்குள் தற்பொழுது அபிப்பிராய பேதம் இருந்துவருகின்றது.

மதமும் மன்னர்களும்

மத சம்பந்தமான விஷயங்களில் பாண்டிய அரசர்கள் சிறிதும் தலையிடுவதே யில்லை. மத விஷயங்களுக்கு அவர்கள் இடங்கொடுத்து வந்தனர். மத சம்பந்தமாக மேல் நாட்டவர்களைப்போல் யாதொரு யுத்தமும் செய்ததாகத் தெரியவில்லை. பாண்டிய நாட்டு அரசர்கள் சைவசமயத்தைப் பின்பற்றி நடப்பவர்களா யிருந்தபோதிலும், அவர்கள் மற்ற மதத்தைச் சேர்ந்த ஜனங்களை ஒருபொழுதும் கொடுமைப் படுத்தியதுமில்லை. புத்த மதத்தைச் சேர்ந்தவர்களையும், ஜயினிமதத்தைச் சேர்ந்தவர்களையும் அவர்கள் ஆதரித்து உதவி செய்துவந்ததாகப் பல சம்பவங்களிலிருந்து நன்கு வெளியாகின்றது. மத விஷயங்களில் அரசர்கள் தலை

யிடாமல் மேல் நாட்டில் இடங்கொடுத்து வருவது பத்தொன்பதாவது நூற்றாண்டு முதல்தான். ஆனால், இந்தியாவில் புராதனகால முதல் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இஷ்டப்படி மதவிஷயமான காரியங்களைச் செய்து வந்தனர். புராதனகாலம் முதல் இந்தியாவில் அரசாட்சிசெலுத்திவந்த மன்னர்கள் தங்கள் நாட்டு ஜனங்களின் மத சம்பந்தமான விஷயங்களில் தலையிடுவதே யில்லை.

பாண்டிய மன்னர்களின் தேச நிர்வாகம்

பாண்டிய தேச மன்னர்கள் தங்களது நாட்டின் நிர்வாகத்தின் விஷயமாகப் பலவித ஏற்பாடுகளைச் செய்திருந்ததாகத்தெரிகிறது. அவர்கள் தங்களது நாடுகளைப் பலப் பிரிவுகளாகப் பிரித்துவைத்திருந்தனர். கிராமங்களெல்லாம் அவைகளது நிலைமைக்குத் தகுந்தாற்போல் பிரிக்கப்பட்டிருந்ததோடு அவைகளை நிர்வகிப்பதற்குத் தகுந்த ஏற்பாடும் அரசனால் செய்யப்பட்டிருந்தது. கிராமங்களும் நிர்வாக விஷயத்தில் ஒரு தனிப்பிரிவாக இருந்து வந்தன. பல கிராமங்களுக்கு வேண்டிய காரியங்களைக் கவனிக்கவும், அவர்களை நிர்வகிக்கவும் "சதுர்வேதி மங்கலம்" என்ற சபை அமைக்கப்பட்டிருந்தது. பலசதுர்வேதி மங்கலங்கள் ஒன்றுசேர்ந்து'நாடு'என்ற சபையை அமைத்துக்கொண்டன. சிலநாடுகள் ஒன்றுசேர்ந்து 'மண்டலம்' என்ற சபையை அமைத்துக்கொண்டன. மண்டலங்களே நாட்டின் மத்திய பொதுஜனப் பிரதிநிதிச் சபைகளாக இருந்து வந்தன. அரசன் தன்னுடைய தலைநகரத்தில் இருந்து கொண்டே தனது இராஜ்ய முழுவதையும் ஆண்டு வந்தான். மேலே கூறப்பட்டுள்ள நிர்வாகப் பிரதேசங்களுள் அந்தந்த இடங்களின் நன்மைகளைக் கருதி உழைப்பதற்காக தனியான ஸ்தல சபைகள் இருந்துவந்தன. கிராம சபைகளில் அங்கத்தினர்களாக இருந்தவர்கள், "சதுர்வேதி மங்கலம்" பிரதேசத்தை ஆண்டுவந்தனர். அதாவது சுமார் ஒரு யோசனை விஸ்தீரணமுள்ள பூமியை நிர்வகித்து வந்தார்கள்.

பண்டைக்காலத்து தேர்தல்கள் நடைபெற்ற விதம்

கிராமசபையில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் ஒவ்வொருவரும் சொந்தத்தில் கால்வேலி நிலமுடையவர்களாகவும், ஒரு வீடு உள்ளவராகவும் இருத்தல்வேண்டும். அவர்கள் 35-வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 70-வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்த அறிவுடையவர்களாக இருப்பதோடு மற்றவர்களுக்கும் கல்வி போதிக்கத் திறமையுள்ளவர்களாக இருக்கவேண்டும். சமீபத்தில் அகப்பட்டிருக்கின்ற சில கல்வெட்டு சாஸனங்களிலி

ருந்துமேலே கூறப்பட்டுள்ள யோக்கியதாம்சங்கள் கிராமசபை அங்கத்தினர்களாக இருந்தவர்களுக்கு அவசியமாக இருந்தன வென்று தெரிகிறது. கிராம சபைகளின் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்ற விஷயத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம். மேலே கூறப்பட்ட யோக்கியதை இல்லாதவர்கள் கிராம சபைக்கு அங்கத்தினர்களாக இருப்பதற்கு லாயக்கற்றவர்கள். தகுந்த மனிதர்கள் கிராமச்சபைகளுக்குஅங்கத்தினர்களாக எப்படித்தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதைப்பற்றி அந்த சிலாசாஸனங் களிலிருந்து நன்கு தெரிகின்றது. கிராம சபைக்குஅங்கத்தினராக இருப்பதற்கு லாயக்குள்ளவர்களில் தாங்கள் விரும்புகின்றவரின்பெயரைகிராமத்திலுள்ள மனிதர்கள் ஒரு பனை ஓலைத் துண்டில் எழுதி அதை ஒரு மண் பானைக்குள் கொண்டுபோய் போடுவார்களாம். அந்தப் பானையில் போடப்பட்டுள்ள ஓலைத்துண்டுகள் வேறு ஒரு பானைக்குள் போடப்படும். பிறகு அந்தப் பானையில் இருக்கின்ற ஓலைத்துண்டுகளை ஒவ்வொன்றாக எடுக்கும்படி ஒரு குழந்தையை விடுவார்கள். அரசரால் அந்தக்காரியத்திற்காக அனுப்பப்பட்டுள்ள மனிதர்கள் அந்தக் குழந்தை எடுத்துக் கொடுக்கும் பனை ஓலைத் துண்டில் எழுதப்பட்டிருக்கும் பெயரைப் படிப்பார்கள். எவர்களது பெயர்கள் படிக்கப்பட்டனவோ அவர்களே கிராம சபைக்கு அங்கத்தினர்களாக இருப்பார்கள். பண்டை கிரேக்கர்களது நாட்டிலும் இதே வழக்கம் புராதன காலத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

குற்றஞ் செய்தவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை

வரவு செலவு கணக்குகளில் தப்புக்கணக்கு எழுதியவர்களுக்கும், தங்களதுகடமையையும்,வேலையையும்சரியாகசெய்யாமலிருப்பவர்களுக்கும் பாண்டிய அரசாங்கத்தில் மிகவும் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. தப்புக்கணக்கு எழுதியவர்கள் பழுக்கக் காய்ந்த இரும்பைக் கைகளால் தொடும்படி கடமைப்படுத்தப்பட்டனர். அக்காலத்தில் குற்றமற்ற மனிதர்களுக்கு மேற்கண்ட கடுமையான தண்டனைகளினால் யாதொரு தீங்கும் ஏற்படாதென்று நம்பப்பட்டு வந்தது. அக்காலத்திலிருந்து வந்தவர்கள் கடவுளிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவர்களாகவும் இருந்து வந்தார்கள். பாண்டிய நாட்டிலிருந்த குற்றவாளிகளுக்கு மிகவும் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டதிலிருந்து அக்காலத்தில் அந்த நாட்டை அரசாண்டுவந்த மன்னர்கள் நாகரிகமற்றவர்கள் என்று கருதிவிடக் கூடாது. அம்மாதிரி கருதுவது தவறேயாகும். அவர்கள் ஆட்சி நடத்திவந்த காலத்தின் நிலைமையை நன்கு அறிந்தே

அவர்கள் விதித்துவந்த கடுமையான தண்டனைகளின் நியாய அநியாயங்களை நாம் ஆராயப் புகவேண்டும்.

பாண்டிய அரசர்களின் தெய்வ பக்தி

பாண்டிய நாட்டை ஆண்டு வந்த பண்டைப்பாண்டிய மன்னர்கள் எல்லோரும் தெய்வ பக்தியிற் சிறந்தவர்களாக இருந்து வந்தார்கள். தெய்வ பக்தியில் அவர்கள் சிறந்திருந்ததனால்தான் பல பெரிய கோபுரங்களையும், தேவாலயங்களையும் அவர்கள் மிகுந்த பக்தியுடன் கட்டி முடித்திருக்கின்றனர். மிகவும் புராதனமான காலத்தில் தேவாலயங்களும், கோயில்களும், அவைகளிலிருந்த விக்ரஹங்களும் மண்ணினாலேயே கட்டப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இந்த உண்மை சமீபத்தில் கிடைத்த பழைய சில சாசனங்ளிலிருந்து விளங்குகின்றது. அக்காலத்திற்குப் பிறகு தேவாலயங்களும், கோயில்களும் கற்பாறைகளிலிருந்து வெட்டப்பட்ட கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் பல இடங்களில் கட்டப்பட்டுள்ள பெரிய தேவாலயங்கள் குன்றுகளின் அடிவாரத்திலும் கட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அவைகளில் சில ஆற்றோரங்களிலும், குளக்கரைகளிலும், உயர்ந்த இடங்களிலும் கட்டப்பட்டிருக்கின்றன. பாண்டிய மன்னர்கள் தங்களது பெயரின் ஞாபகார்த்தமாகவும், தாங்கள் யுத்தத்தில் அடைந்த வெற்றிகளின் அறிகுறியாகவுமே பல பெரிய தேவாலயங்களைக் கட்டியிருக்கின்றார்களென்றும், அம்மாதிரி செய்வதே அவர்களது வழக்கமாக இருந்ததென்றும் சிலாசாஸன ஆராய்ச்சிகளிலிருந்து நன்குபுலனாகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள தென்காசியில் கட்டப்பட்டுள்ள குலசேகரமுடையார் தேவாலயமும், கோட்டைகுருங்குளம் என்ற இடத்தில் கட்டப்பட்டிருக்கின்ற ராஜ சிங்கேஸ்வர ஆலயமும், கொண்டசோழபுரம், வீரபாண்டிய பட்டினம்முதலிய ஊர்களும் பண்டை மன்னர்களின் பெயரால் அழைக்கப்பட்டு வருவதிலிருந்து பண்டை மன்னர்கள் எதற்காகதேவாலயங்களைக் கட்டினார்களென்று ஊகிக்க இடமிருக்கின்றது. பல தேவாலயங்களில் நாம் அதைக் கட்டியவர்களின் உருவச்சிலைகள் கல்லில் செய்யப்பட்டாவது, அல்லது தாமரத்தில்செய்யப்பட்டாவது வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கின்றோம். கோயில்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்ற காலத்தில் அத்தேவாலய தருமகர்த்தர்கள் அந்த ஆலயங்களைக் கட்டிய அரசர்கள், பெரியார் இவர்களின் உருவச்சிலைகளுக்கு மரியாதை செய்வதையும் நாம் பார்த்திருக்கிறோம். தேவாலய வழிபோட பெரும்பாலும் மத விஷயத்திலும், வித்தியா சம்பந்தமான

விஷயங்களிலும் பெரிய தூண்டு கோலாக இருந்து வருகின்றது. பல ஸ்தலங்களின்மீது அப்பர், சுந்திரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் முதலிய பெரியார்கள். பாடியுள்ள தேவார திருவாசகங்கள் மற்றும் பல பக்திசுவைத்ததும்பும் பாடல்கள் மனிதர்களுக்கு மதப்பற்றையும், கல்வி அறிவையும் வளர்க்கக் கூடியவைகளாக இருக்கவில்லையா? பண்டைநாட்களில் தேவாலயங்களில் ஒவ்வொருநாளும் நான்கு காலம் பூஜை நடைபெற்று வந்ததாகத் தெரிகின்றது. அதற்குப்பின்புதான் தேவாலயங்களில் ஆறுகாலபூஜை நடைபெற்று வந்ததென்று நாம் சிலசாஸனங்களின் மூலமாக அறிகிறோம். நமது தமிழ்நாட்டில் கட்டப் பட்டுள்ள தேவாலயங்கள் மனிதர்களுக்கு ஆத்மஞான உணர்ச்சியையும், பக்தியையும் பெருக்குவதற்குச் சாதனங்களாக இருப்பதுமன்றி, பெரிய உத்ஸவ காலங்களில் சுற்றுப்பக்கங்களிலிருந்து சுவாமிதரிசனம் செய்வதற்கு வருகின்ற கிராமவாசிகள் ஒன்று சேர்வதற்கும், அவர்களுக்குள் சகோதர வாஞ்சை, அன்புமுதலியன பரவுதற்கும் சிறந்தசாதனங்களாக இருந்து வருகின்றன.

பண்டை நாட்களில் தேவாரங்கங்களே கல்வி விருத்திக்கும், அறிவு வளர்ச்சிக்கும் நிலைக்களனாக இருந்து வந்தன. தேவாலயங்களில் இதிகாசங்களென்ன, புராணங்களென்ன இவைகள் ஓதப்பட்டுவந்தன. பலர் தேவாலயங்களிலேயே வேதாத்தியனம் செய்துவந்தார்கள். பண்டை நாட்களில் தேவாலயங்களினால் நமது நாட்டிலிருந்த தமிழர்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் எண்ணில. அவைகளை யெல்லாம் ஈண்டு விரிக்கிற் பெருகும்.

(தொடரும்.)

கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கவேண்டுமானால் "விவேகபாநு"வை வாசியுங்கள்.

விவேக வளர்ச்சிக்கு இன்றியமையாத பத்திரிகை "விவேகபாநு" ஒன்றேயாதலின், எல்லோரும் சந்தாதாரராகச் சேருங்கள்.

அன்பர்காள்! உங்கள் வாழ்நாட்களில் வீண்வழிகளில் எவ்வளவு ரூபாய் செலவழித்திருப்பீர்களென்பதை நீங்களே ஆழ்ந்து யோசியுங்கள்! நல்வழியைப் போதிக்கும் "விவேகபாநு"வுக்கு ஒருவருடத்திற்கு ஏன் ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதென்பதை சிந்தித்துப் பாருங்கள்!

வருடச்சந்தா ரூபாய் ஒன்றுதான்.

விலாசம்:—"விவேகபாநு" ஆபீஸ்,
சௌகார் பேட்டை, சென்னை.

:: எறும்பின் சரிதை ::

ஆசிரியர்: மூ. மாணிக்க நாயகர் எழுதுவது

(முன் தொடர்ச்சி)

கணிகண்ணன்:—மணிவண்ணா! நீ விரும்பிய வண்ணமே முதலில் பிள்ளையா ரெறும்பு என்பதைப்பற்றி சொல்லுகிறேன் கேள்! எறும்புகள் இனத்தில் பிள்ளையாரெறும்பு ஒருவகை. அவ்வினத்தில் பேரெறும்புகளும், சிற்றெறும்புகளும் உண்டு. பேரெறும்புகள் எப்போதும் ஈரமான நிலங்களிலே காணக் கிடைப்பன. இவைகள் எறும்பினத்தில் கருப்பு நிறமுடையனவாய் மற்ற எறும்புகளை விட கொஞ்சம் பருத்த தேகமும், தலை, இடை, கடை இம்மூன்று உறுப்புகளும் சமமானவைகளாகவும் உடையனவாக விருக்கின்றன. இவைகள் உணவைப் பற்றும்போது தங்கள் உடலை வளைத்து உணவுகளிலுள்ள சுவையைக் கிரகிக்கின்றன. இவ்வினத்தின் சிற்றெறும்புகள் மற்றவைகளைவிட மிக ஒல்லியாய் இருக்கின்றன. இவைகளுக்குக் கடிக்கத்தெரியாது. இவைகளுக்கு நொய்த்துணுக்கின் பேரிலேயே மிகப் பிரியம் போலும், இவைகள் மற்றெறும்புகளைப் பார்க்கிலும் வெகுவிரைவாகச் செல்லுகின்றன. இவைகளின் கால்கள் பூமியிற் படியாமலே செல்கின்றன வென்று சொல்லத்தகுமாப்போல் இவைகள் வெகு விரைவாக ஓடுகின்றன. ஓட்டத்தில் மற்ற எறும்புகளைப் பார்க்கிலும் இவைகளே முதன்மையானவை. மரங்களின் நிழலைச்சார்ந்த இடங்களில் அதிகமாயும் மற்றிடங்களில் கொஞ்சமாயும் காணப்படுகின்றன. இவ்வெறும்புகள் ஓடும்போது தத்தம் வாயில் ஒவ்வோர் முட்டையையேனும், நொய்த்துணுக்கையேனும் பற்றிக்கொண்டே செல்கின்றன. அன்றியும், இவ்வெறும்புகள் ஓடுவதைப் பார்ப்பவர்கள் இவைகள் எதையோ கண்டு மிரண்டோடுகின்றன வென்றே கருதுவார்கள். மணிவண்ணா! பிள்ளையா ரெறும்பைப்பற்றிய ஆராய்ச்சி எனக்குக் கிடைத்த திவ்வளவுதான்!

மணிவண்ணன்:—கணிகண்ணா! பிள்ளையா ரெறும்பைப்பற்றிய சில செய்திகளைக் கூறி முடித்தாய்! இன்னொருவித எறும்பைப் பற்றி அதாவது "கறுப்பெறும்பு" என்பதைப்பற்றிக் கூறு பார்ப்போம்.

கணிகண்ணன்:—மணிவண்ணு! அங்ஙனமே சொல்லுகிறேன் கேள்! கறுப்பெறும்பிலும் 'பேரினம், நடுத்தரம், சிற்றினம், என மூன்று வகையுண்டு. பேரெறும்புகள் மற்றைய எறும்புகளைப் பார்க்கிலும் பருத்திருக்கின்றன. இவைகள் பருத்திருப்பதுடன் கனத்தும் இருக்கின்றன. இவைகள் மற்ற எறும்புகளைப் பார்க்கிலும் அதிகம் கறுப்புநிறம் வாய்ந்தனவாய் இருக்கின்றன. இவைகள் நடக்கும்போது தாமதமாகவே செல்லுகின்றன. மிகவும் வேகமாகச் செல்லவேண்டுமானுல் இவைகளால் முடியாது. இப்பேரெறும்புகள் தீனியை நாடிச் செல்லாமல் சிற்றினந் தேடிக்கொண்டு வரும் தீனியைத்தின்று எப்போதும் தன்னினத்தவர்களுடன் சண்டை செய்துக்கொண்டே யிருக்கும். இவ்வினத்தில் இரண்டு எறும்புகள் சண்டை செய்ய ஆரம்பிப்பின் இரண்டிலொன்று தோல்வியடையும் வரையில் சண்டை செய்யும். மழைக்காலத்தில் இப்பேரெறும்புகள் சிற்றினத்திற்கு உதவிசெய்யும் மழைவரும் நேரம் அவைகளுக்குத் தெரியும். அப்போது பலதிறப்பட்ட எறும்புகளும் தத்தம் வாயில் ஒவ்வோர் முட்டையைத் தூக்கிக்கொண்டு தத்தம் புற்றுக்களை விட்டு வெளியே வரும். அவைகளைப் பேரெறும்புகள் கவிந்துகொள்ளும். மழைநீர் வரும்போது அவைகளனைத்தும் ஒரே கும்பலாய் நீரோடும் வழியே சென்று மேடு தட்டுபட்ட இடத்தில் நின்று தத்தமக்கியன்றவாறு பிரிந்து புற்றுக்களை நாடிச் செல்லும்.

கறுப்பெறும்பின் நடுத்தரம் இரண்டு பிரிவுகளை யுடையது. ஒன்று பேரெறும்புக்குக் கொஞ்சம் சிறியது. மற்ருென்று சிற்றினத்திற்கு கொஞ்சம் பெரியது. இவைகள் அதிக பலமுள்ளன. வயல் வெளிகளிலும், புலங்களிலும், புற்புதர்களிலும் அதிகமாய் நிறைந்துள்ளன. இவைகள் நெல்லை யலகூஷியமாய்த் தூக்கிச் செல்லுகின்றன. இவைகளுக்குக் கடிக்குங் குணம் உண்டு. இவைகள் தங்கள் இனத்தைச்சார்ந்த எறும்புகள் இறந்துவிட்டால், அவ்வெறும்புகளைத் தம் வளைக்குள் தூக்கிச் செல்கின்றன. இவ்வெறும்புகள் அதிகாலையிலும், மாலையிலும் மிக ஊக்கமாய் வேலை செய்கின்றன. இவைகள் சாரை சாரையாய் போகும்போது இரும்புத்துண்டுகளை வரிசையாக அடுக்கிவைத்தாற்போல் காணப்படுகின்றன. ஆனுல் இவைகளுட் சிலவற்றிற்குத் தலைபெருத்தும், சிலவற்றிற்குக் கடைபெருத்துங் காணப்படுகின்றன. இவைகள் சுவையுள்ள பொருள்களையும் மாவாகும் தானியங்களையுந் தின்னுகின்றன. இவ்வெறும்புகள் வீதிகளிலும், வரப்புகளிலும் ஒற்றடிப் பாதைகளிலும், மற்றும் வெளிகளிலும் காணப்படுகின்றன. எறும்பினத்தில், இவ்வெறும்புகளே மனிதர்களின் அஜாக்ரதையினுலும், பிறவற்றுலும் அதிகமாய் இறந்து படுகின்றன.

(வரும்)

நமது நீதிக் கதைப் பகுதி

குடியாத்தம் 'சேஷவிலாஸ்' தமிழாசிரியன்,

லால்குடி - சே. கந்தசாமி எழுதுவது

அலமேலு மூட்டிய அவியா நெருப்பு

(உரிமை ஆசிரியனுக்கு உரியது)

(முன் தொடர்ச்சி)

நான் கண்களைத் திறந்து நினைவுடன் பார்த்தபோது மதகுக்குச் சுமார் பத்து கஜதூரத்தில், ஒரு மரத்தின் வேரிலிருந்தேன். கொஞ்சம் அதிகச் சிரமம்கொண்டு வேரிலிருந்து விடுவித்துக்கொண்டு கரையிலேறி, அலங்கோலமாய்த் தொங்கிக் கொண்டிருந்த தலை மயிரை முடித்துக்கொண்டு, "அலமு! அலமு!!" என்று நாத்தழும்பேறக் கத்திக் கூவியவண்ணம் நாலாபுறமும் சுற்றிப் பார்த்தேன். 'நாமே கஷ்டப்பட்டபோது அலமேலுவா கரையேறி இருக்கப்போகிறாள்?' என்று எண்ணிப் பித்துப் பிடித்தவன்போல மதகோரத்திற்கு ஓடினேன். அங்கும் அவ்வழகியைக் காணாததால், என் அருமைக் கண்ணாட்டியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆவேசம் வெகு தீவிரமாகக் கிளம்பிற்று. ஆகவே, ஆற்றிலிறங்கி எனக்குத் தெரிந்ததும், அலமேலு இல்லாததுமான எல்லா இடங்களையும் தேடி, அயர்ந்து, மன நிலை மாறினேன்; திரும்பி கரைக்கு வந்து, பாலத்தின் மேல் நின்றவண்ணம், "என் பொருட்டு அவள் உயிர் விட்டாற்போல இவளுக்காக நானும் என் உயிரை விட்டு விடுகிறேன்;" என்று தீர்மானித்து, "பைரவி நாதா! பாண்டு ரங்கா! பரம கிருபாகரா! நான் தெரிந்தும் தெரியாமலும் செய்திருக்கக்கூடிய பாபங்களை மன்னித்துத் தமது அருட்கடலில் மூழுகச் செய்யும்; தவிரவும், அலமேலு கிடைக்காத குறைவுடன் பிராணனை இழக்கப்போகிற என் மனக் குறைவு, அந்தியகாலத்தில் ஒருவன் எம் மனக் குறைவுடன் உயிரை இழந்தானே, அவனுக்கு மறுபிறப்பில் அக்குறைவு நிறைவுறும் என்னும் நீதிபிறழா வண்ணம் நிறைவேறுமாகவும் செய்யவேண்டுமாய் மனமொழி மெய்களால் பிரார்த்தித்துக் கொண்டு

கிறேன்,'' என்று கூறி எங்குமுள்ள என் பிராணனைத் திரிகரண சுத்தியாய் வணங்கி, ஆற்றில் சுழிகள் நிறைந்த இடத்தில் குதித்தேன். வலிய என் பிராணன் போகமாட்டேன் என்றது. 'ஏ ஆறே! என்மேல் உனக்கு என்ன கோபம்? என்னை விரும்பிய அலமுவுடன் என்னைச் சேர்க்க நீ பின்வாங்குவதன் காரணந்தான் என்ன? அலமுவின் தாயாகிய மகாபாவியைப்போல நீயும் அழியாத பாபத்தைத் தேடிக்கொள்ளாதே! அழகிய மங்கை யொருத்தியின் வாழ்வை மணமற்றதாகச் செய்ததுமன்றி முடித்தும் விட்டதனால் உனக்குண்டாயிருக்கும் மகத்தான பாபம், அலமு அன்னத்தின் அந்தரக் கோவில் குடிகொண்ட என்னை அவளுடன் சேர்ப்பதால் உண்டாகும் புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்ளுவதனால் நீங்கிப் போகட்டும்;' என்று முறையிட்டு மறுபடியும் சுழியின் பக்கமாய் சென்றேன். அந்தப் புனிதமான ஆறு; 'கந்தா! இம்மாதிரி நீ செய்வது தருமமன்று ஏனெனில், அலமு, அவளது பெற்றோர்களால் உனக்குக் கொடுக்கப்படவில்லை; மணமாகும் வரையில் பெண்கள் பெற்றோர்க்குரியவரும், அவர்க்கு அடங்கி நடக்கக் கடமைப் பட்டவரும் ஆகையினால், என் வலம் புரி சுழிமானும் உந்தி பெற்ற அவ்வணங்கை நீ விரும்புவதும், அவளிருக்கு மிடத்தைக் குறுகுவதும் கூடாத காரியங்களாகும்;'' என்று சொல்லித் தடுப்பதைப்போல ஒரே தள்ளாகத் தள்ளிற்று. தள்ளப்பட்ட வேகத்தைத் தடுக்க முடியாத நான் சில நிமிஷங்களில் 20 கஜங்களுக்கப்பால் ஆற்றின் குறுக்கே விழுந்திருந்த ஒரு மரத்தின் பக்கத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். உடனே, 'பிராணன் போகவேண்டிய விதி இருந்தால்தான் பிராணன் போகுமே ஒழிய நம்மால் போக்கிக்கொள்ள முடியாது,' என்று எண்ணி, மெதுவாக அம்மரத்தின்மேல் ஏறி உட்கார்ந்து ஆற்றை நோக்கினேன்;

ஆற்றை நோக்க நோக்க எனக்கு கோபமும் விசனமும் மேலிட்டன; "என் ஆகத்தில் குடி கொண்ட அலமேலு என்னும் மங்கையை அபக்கென்று வாயில் போட்டுக்கொண்ட பாவி ஆறே! அலமேலுவைப் பிரிந்திருப்பதனால் நான் அடையும் துன்பத்தைப் பார்த்துக் கல்லும் கரையுமே! உன் மனம் இளகாதேனா தெரியவில்லை.''

"ஏ அலமேலு! என் மனம் வருந்தச் சிறிதும் பொறாத மாணிக்கமே! அணிந்தவருக்கு மனமொழி மெய்களில் தண்மையைத் தரும் இரத்தினமே! என் அன்பே! என்வாழ்க்கைத் துணைவியா யிருந்திருக்க கங்கணம் கட்டிக் கொண்டிருந்த என் கற்பகமே, உன் சுவாசம் என்

னும் தேனை அறவே திருட்டுத்தனமாய்த் தண்ணீரில் மறைந்திருந்த வண்ணம் உறிஞ்சிய எமனுக்கு ஆண்பிள்ளையாகிய என்னுயிரை உண்ணப் போதுமான சக்தி இல்லை போலும்!—ஆகா! நான் மறந்தேன்! மறந்தேன்!! அவன் உன்னை ஜெயிக்கவில்லை; நீ அவனால் ஜெயிக்கவில்லை; தர்மிஷ்டனாகிய அவன். உன் அழகைத் தேவலோகத்திற்குக் காட்ட உன்னை அழைத்துக்கொண்டு போயிருப்பான் போலும்! ஏ அலமு! ஏன் நீ அவ்வளவு அழகாகப் பிறந்தாய்? 'ஆற்றிலேயே நாம் பேசிக்கொண்டிருப்போம்; அந்த இடத்தை விட்டகல மாட்டோம்.' என்றே அவன் அப்படிச் சுழலாகவந்தான் போலும்! என் அருமைத் தெய்வமே! அழகின் அவதாரமே! 'இக்காலத்தில் ஸ்திரீகள் படித்து விடுவது பெரிதல்ல; அவர்களுக்குக் குடும்பத்தை நடத்தும் விதம் தெரியவில்லை; நான் நாளைக்குப் பெரியவளாகி ஒருவரை மணக்கும் பாக்கியம் கிட்டுமானால், உலகத்தில் உள்ள ஸ்திரீகளில் ஒவ்வொருவரும் தன் கணவன்-மாமி-மாமன்-புத்திராள் முதலியவரிடத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்றும், ஒய்வு நேரங்களில எப்படிப் புருஷனைச் சந்தோஷிப்பித்து, சத்காலங் கழிக்கவேண்டுமென்றும் நடந்து காட்டப் போகிறேன்;' என்றதெல்லாம் வியர்த்தமாய் போயிற்றே! 'நான் ஒரு மாமியாகும் காலம் நாட்டுப் பெண்களை நடத்தவேண்டிய முறைமையை நடத்திக் காட்டப் போகிறேன்; அதைக் கண்டு நீயும் மகிழப் போகிறாய்;' என்று சொன்ன அலமு! நீ இவ்வளவு சிறுவயதில் என் மனத்தில் அவியாத நெருப்பு மூட்டி மறையவோ பிறந்தாய்? காலையில் நான் என்ன சங்கதி சொல்லப்போகிறேனோ வென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் என் தங்கைக்கு இவ்வாணிடியை எவ்வாறு கூறுவேன்?

"கதை வகுப்பில் கதை சொல்லத் தலையை நிமிர்த்தும்போது உன் வதனம் பிரகாசிக்காத சபையைக்கண்டு எப்படிக் கதை சொல்லுவேன், அலமு! என் நடு வயிற்றில் எரிமலைகள் பல கூடிக்கொண்டு கோரமான நெருப்பு, புகை முதலியன வற்றைக் கக்கும்படி விட்டுவிட்டுப் போகும் சுந்தரவதனீ! "நான் இனிமையான கதைகளைப் படிக்கும்போது பக்கத்திலமர்ந்து இனிமையாகக் கேட்டுக் களிக்கும் அலமு! நான் கதை சொல்லும்போது என் முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கும் அலமு! உன்னைப் போல அருமையாயும், ஸ்வாரஸ்யமாயும் கவனமாகவும் கதைகளை இனியார் கேட்கப் போகிறார்கள்? யானும் இனியாருக்குச் சொல்லப் போகிறேன்; அன்பான அலமு! என்னால் சொல்லப்பட்ட பலகதைகளையும் கேட்டுக் களிப்புற்ற நீ, நீ சொன்ன எல்லாக் கதைகளிலும் ரோஜாதேவிக் கதையே என்னைப் பரவசப்படுத்தியது.

பதிவிரதைகளுடைய கதைகளில் சீதை ஒருவளே தன் பர்த்தாவைப் பிரிந்து பன்னிரு திங்கள் கஷ்டப்பட்டவள் என்று நான் எண்ணி இருந்தேன். உன் பதினெட்டு வருஷப் புதையலாகிய அந்த ரோஜா தேவி 18 வருஷங்கள் கணவனைப் பிரிந்திருந்தது மிகவும் விசனிக்கத் தக்கதாயிருந்தது. 18 வருஷங்களாய் அவள் அந்தப்புரக் கதவு அவள் கற்பின் வலிமையாய் சாற்றப்பட்டிருந்தது. முடிவில் அவளுடைய சத் புத்திரனாகிய ஜயசீலனின் கால் உதையால் திறக்கப்பட்டதை நீ சொன்னபோது, நான் என்னையும் மறந்து 'ஐயோ!' என்று கத்தினதும் நீ அறிந்ததல்லவா? ரோஜாதேவியைப்போன்ற தர்ம பத்தினியும்; ஜய சீலன் போன்ற சத் புத்திரனும், ஜயபாலன் போன்ற வேலைக்காரனும் காளிகரன்போன்ற நண்பனும் இவ்வுலகிலிருந்தால் உலகின் வாழ்க்கையை விரும்பாதார் இருக்கமாட்டார்கள்; நவரசந் ததும்பித் தேச புக்தி யொழுகும் இக்கதையே இக்காலத்திற்கேற்றது. இதை நீ புத்தக ரூபமாய் எழுதி அச்சிட்டால் சீக்கிரம் விலையாவதுடன் கூட உலகம் திருந்தும்; அதில் ஆண்களுக்கும், பெண்களுக்கும், கலியாணமானவர்களுக்கும், கலியாணமாகாதவர்களுக்கும், பாலருக்கும், வயோதியருக்கும் இன்றியமையாத பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. பல விஷயங்களில் என்னை அப்படியே உருக்கிவிட்ட அக்கதையைக் கேட்க நானும், இன்னும் சிலருமே பாக்கியம் பண்ணியிருந்தோம். இதைக் கேட்கக் கொடுத்து வைக்காதவர்கள் பாபம் பண்ணினவர்களே! ஆதலினால் வெகு சீக்கிரத்தில் பிரசுரித்து, லாபத்தில் பெரும்பாகத்தைப் பெண் கல்விக்கும், தேச க்ஷேமத்திற்கும் செலவழிப்பாய் என்று நம்புகிறேன்; "என்று கூறிய அலமு! நீ அது பிரசுரிக்கப்படுவதைப் பார்க்காமலேயே போய்விட்டாயே!" என்று புலம்பி வெகுவாகத் துக்கித்தேன். 'காட்டில் புஷ்பித்த புஷ்பமான அலமு! அலமு!' வென்று எவ்வளவோ புலம்பிப் பெருமூச்சுவிட்டு, திகைப்புப்பூண்டு மிதித்தவன் போலிருந்தேன்.

அச்சமயத்தில் யாரோ என்னைக் கூப்பிடுவதுபோலிருந்தது. குரல் மேலிருந்து வந்தமையினால் நிமிர்ந்து நோக்கினேன்; அந்த மரத்தி

குறிப்பு:—"ரோஜாதேவி—பதினெட்டு வருஷப் புதையல்" என்னும் அப்புத்தகம் இப்போதுதான் பிரசுரமாயிற்று. காத்திராமல் உடனே ஆர்டர் கொடுத்துவிடுங்கள். அது குடியாத்தம், சித்தூர் ரோட், 116-430 நெம்பர் வீட்டிலிருக்கும் L. S. K. சுவாமி ஐயரிடம் கிடைக்கும். விலை ரூபாய் 1—8—0 தபால்கூலி வேறு.

லேயே, எனக்குமேலிருந்த ஒரு கிளையில், மனத்தால் நினைத்துப் பார்ப்பதற்கும் முடியாத தேஜஸுடன் கூடிய ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருந்ததுபோலிருந்தது. அவள் என்னை நோக்கி, "கந்தா! நீ ஏன் வீணாக வருத்தப்படுகின்றாய்? மேலுலகத்திலேயேயன்றி இவ்வுலகத்தில் இனி நாம் சேரப்போகின்றதில்லை. நீ இந்த உலகு முழுவதும் சுற்றி, "மணம் செய்யும் விஷயத்தில் வதூவரர்களுடைய மனம் பொருத்தத்தையும் கட்டாயம் பெற்றோர்கள் கவனிக்கவேண்டும். மனப் பொருத்தமின்றி வேறு எப் பொருத்த மிருந்தாலும் பிரயோசனமில்லை "என்று சந்து முடுக்குக்களிலெல்லாம் போய் சொற்பொழிவு நடத்து" என்று கூறினாள். கந்தர்வஸ்திரீயைப் போலவும், அலமேலுவைப் போன்று மிருந்த அவ்ரூபத்தை நான் உடனே விளித்து, "அம்மைதேய! இலக்கணங்கள் தானும் படித்தறியாத எனக்குச் சொற்பொழிவு செய்யும் வண்மையும் பழக்கமும் கிடையாதே, அவ்வாறிருக்க நான் எவ்வாறம் ஏவல்பிரகாரம் நடக்கப் போகின்றேன்?" என்று கூறினேன். அது, நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்; படித்த வித்வான்களிடம் முறையிடுவதைப் பார்க்கிலும், ஏழைபாழைகளான நாட்டுப்புற வாசிகளினிடம் சென்று சௌகரியப்பட்டபோதெல்லாம் உன் இவ்வனுபவக் கதையைக் கூறி என் பரிதாபகரமான முடிவையுங் கூறுவாய். என்னை ஒருதாரணமாக எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு தாய் தந்தையினிடமும் வதூவரருக் கிஷ்டமில்லாத மணத்தில் தலையிடுவதில்லை என்ற பிரதிக்ஞையை வாங்கு; கிராமக் குடிகளைச் சரிப்படுத்தினால் பட்டணங்கள் சரியாகி விடும். மனமொப்பிய மணங்கள் கமழுகின்ற காலத்தில் வரதக்ஷிணை சுரமும், கற்பிழத்தலும், தாசி வேட்டையும், குடும்பச் சச்சரவுகளும் உண்டாகா; வீண் கலவரப்படாதே! படாதே!" வென்று சொல்லி மறைந்துபோய் விட்டது.

நான் இதுவென்ன புதுமை யென்றெண்ணமிட்டுக் கொண்டே நேராக வீடு செல்வதற்கு மனமில்லாவிட்டாலும், ஏழைக் குடும்பரக்ஷணை நிமித்தம் வீடு நோக்கி மெதுவாக நடக்கலானேன். மணி அப்பொழுது பகல் பன்னிரண்டிருக்கும். (அந்த நிமிஷமுதல் என் மனத்தில் ஒரு புத்துயிர் உண்டாயிற்று) * * * * *
இனியுள்ள விஷயங்களைச் சொல்ல அதிக நேரம் ஆகாது.

ஆற்றுக்கு ஸ்நான நிமித்தமாகப் போன அலமு திரும்பி வராததால் அவளது பெற்றோர் சந்தேகங்கொண்டு ஆறு அடைந்தனர். குடம் மாத்திரம் கரையில் இருந்தபடியினால் அவளாற்றில் இறந்திருப்பாள்

என்று 40-50 கூலிக்காரர்களை விட்டு அலமுவை ஆற்றில் தேடவிட்டனர். பத்துமணி சுமாருக்கு மதகு ஒறத்திலிருந்து அலமுவின் பிரேதம் எடுக்கப்பட்டது; போலீஸ் புலிகள் கூடின, பந்துக்கள் மொய்த்தனர். நானில்லாமையினாலும், தன் குற்றம் வெளிப்படுமென்ற பயத்தினாலும் அலமுவின் அன்னை அலமுவை நான் காதலித்திருப்பதாகவும், அவள் ஏழையாகிய என்னை மணக்க இசையாமைப்பற்றி ஆற்றுக்கு அவள் தனிமையாய் வருதை எப்படியோ அறிந்து நான் அவளை வழியில் மடக்கி என்னையே மணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தி யிருப்பேனென்றும், அவள் மறுத்தாள் கைகொண்டமட்டுமடித்து ஆற்றில் தள்ளியிருப்பேனென்றும் தான் அனுமானிப்பதாகவும் போலீசாரிடம் அவர்கள் விசாரித்தபோது தெரிவித்தாள். நான் வீட்டில் அக்காலத்தில்லாதிருந்ததால் என்மேலிந்த சந்தேகம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. என்னைத் தேடிக்கொண்டிருந்த போலீசார் உடனே ஒரு டாக்டரை அழைத்து வந்து பிரேதத்தின்மேல் அடிகள் விழுந்திருப்பதன் காரணத்தைக் கேட்டார். அவர், அவை படிக்கட்டுகளுடைய அடி என்றும் ஆற்றில் தவறி விழுந்திருக்கவேண்டும். என்று எழுதிவிட்டார். நான் விடுபட்டேன். அலமேலுவின் சவம் அக்கினை மணந்தது. * * *

டாக்டர் மகா காருண்யம் படைத்தவரானபடியினால், மறுபடியும் அலமுவின் தந்தையினிடம் வந்து, "அலமுவின்மேல் உள்ளகாயம் படிக்கட்டுகளின் அடிகளல்ல, பரிசோதிக்கப்படாமல் பிரேதம் உங்களுக்குச் சேரவேண்டும் என்று அவ்வாறு சொன்னேன். அடிகளின் தடிப்பைக் கண்டபோது ஒரு விசிறிக் கட்டையினால் கொடுக்கப்பட்ட அடிகள் என்று பட்டது ஆதலாலும், கந்தனையே தான் மணந்து கொள்ளப்போவதாகத் தன் வயதொத்தவரிடம் அலமு ஜாடையாய் தெரிவித்திருப்பதாலும், கந்தனும் அவளைக் காதலித்திருப்பதனாலும் எனக்குப்பலப்பல யோசனைகளுண்டாகின்றன, கந்தன் அவ்வாறு ஒரு பெண்ணை அடித்து ஆற்றில் தள்ளக்கூடிய பாபியல்ல வென்று சொன்னார்.

பிறகு எப்படியோ உண்மை ஊர் முழுதும் பரவிப்போய்விட்டது. அலமுவின் அன்னையைக் காரித் துப்பாதவர்களில்லை. அந்த ஏக்கத்தினாலும், தன் வினை தன்னைச் சுடும் என்னும் பழமொழி பொய்க்காததாலும் சில தினங்களில் அலமுவின் அன்னை, வியாதியாய்ப் படுத்தாள். அப்போதவள் ஒருநாள் என்னை அழைத்து, கந்தா! இந்த

வினையை நானே சம்பாதித்துக் கொண்டேன்; பலனை அனுபவிக்கின்றேன். உன் அத்திம்பேரைக் கூட்டிக்கொண்டுவா!'' என்றாள். நான் அலமுவின் தந்தையை உடனே அவ்விடம் கூட்டிக்கொண்டுவந்தேன். அவள் உடனே எங்களை நோக்கி அலமு இறந்ததற்குக் காரணம் தானே என்று சொல்லி நடந்தவைகளை ஒன்று விடாமல் வெளியிட்டாள். நானும் என் அனுபவத்தைக் கூறினேன். தந்தை கோபங் கொண்டாராயினும் வியாதியுடன் படுத்திருந்த தன் மனைவியை ஒன்றும் செய்ய முடியாமல் பெருமூச்சுவிட்டுக்கொண்டு நின்றார் பின்னும் அவள், ''என்னை நோக்கி' என்னை நீயும், உன் அத்திம்பேரும் மன்னிக்கவேண்டும். நான் உன்னுடையவும்" அலமுவுடையவும் வாழ்வை கெடுத்தபாவி, என்றாள். அதைக்கேட்டும் பெருமூச்சுவிட்ட மானியான அலமுவின் தந்தை திடீரென்று கீழேவிழுந்தார். அழுதார், புலம்பினார், என்னை அருகில் அழைத்து, 'என் துர்ப்பாக்கிய கதையை லோகத்தாருக்குக்கூறி வரதக்ஷிணை ஒழியவும், மணமுற்ற மணங்கள் நடக்கவும் செய்வாய். ஏழைகள் பணக்காரரை மணக்குப்படியும், பணக்காரர் ஏழைகளை மணக்கும்படிக்கும் தூண்டுவாய்! தூண்டுவாய்!! என்றார். துறந்தார் உயிரை அலமுவை கண்டு கேட்க.

இச்சமயத்தில் அலமேலு இறந்ததனால் உண்டான துயரை ஆற்ற வீட்டோடு வீடாய் வந்திருந்தவர்கள் கூடிவிட்டார்கள். அலமு அன்னை, 'கந்தா! பெண் புத்தி பின்புத்தியாயிற்று. உனக்கு அலமுவைக் கொடுத்திருந்தால் எவ்வளவோ நன்மைகளையும், சுகத்தையும், சந்தோஷத்தையு மடைந்திருப்பேன். பணத்தாசையால் மகளை இழந்தேன். உன்னை யிழந்தேன், தனம் இழந்தேன், மஞ்சட் கயிறிழந்தேன், நானும் உயிரை இழந்தேன்' என்று சொல்லிக் கணவரையும் மகளையும் தொடர்ந்தாள்.

பின்னுரை

அன்பர்களே!

நான் என் அனுபவக் கதைகளில் ஒன்றை நடந்ததை நடந்தவாறே நவின்றேன். பெண்களைப் பெண் தெய்வம் அதாவது சக்தி என்று நினைத்து, ஆண்களைப்போல அவர்களுக்கும் சிற்சில விஷயங்களில் உரிமை வுண்டு என்று கருதுகிறவர்களுக்கே யன்றி ஏனையோ

ருக்கு இதுகள் மனதில் ஏறாது. என்பது என் துணிபு. ஆகையினால் இதனை நீங்கள் கட்டுக்கதை என்று எண்ணினாலும் எண்ணுக. உண்மை என்று நம்பினாலும் நம்புக. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. மற்ற விஷயங்களில் ஸ்திரீகளுக்கு உரிமை உண்டு இல்லை யென்பதை வாதிக்க நான் அருகனல்ல. ஆனால் மண விஷயத்தில் ஸ்திரீகளுக்குத் தன் கணவனை வரிக்கச் சகல சுதந்திரங்களும் உண்டு என்பதை முழுமையிலும் உறுதியாகச் சொல்லுகிறேன்! சொல்லுகிறேன்! சுபம்! சுபம்!

லால்குடி சே கந்தசாமி.

கர்ணத்தின் தடபுடல்

T. K. ஹரிஹரபுத்ர சர்மா எழுதுவது

(ஆனந்தகான ஸபா கரிசூழ்ந்தமங்கலம்)

முன்பு ஒரு காலத்தில் மல்லி என்று ஊரில் சண்டப் பிரசண்ட சுந்தரமைய்யர் என்னும் அந்தணன் கிராம கர்ணம்வேலை பார்த்துவந்தார். அவருடைய மேல் உத்தியோகஸ்தரும் கிராம ஜனங்களும் அய்யரைக் கண்டால் ஏ கர்ணம் என்றழைப்பார்கள். அதனால் அய்யருக்கு மிக்கமதிப்பு குறைவாக இருக்கிறதென்று தனது வேலையை இராஜிநாமா கொடுத்து விடலாமென்று யோசனை செய்து, அடுத்த ஊருக்குச்சென்று பரிசாரகம்செய்து பிழைக்கலாமென்று எண்ணிசமுத்திரம் என்னும் ஊரில் சமையல் கிருஷ்ணய்யர் என்னும் பிரபல சமையற்காரனிடம் தன்னை சம்பளத்துக்கு வைத்துக்கொள்ளுமாறு கேட்க, கிருஷ்ணய்யரும் சரியென்று தன்னிடத்தில் அமர்த்திக்கொண்டார். அவ்வூரில் சிலநாள் சென்றதும், பெருத்த கணவானாகிய இராவ்சாஹிப் கே. எஸ். மீனாக்ஷிசுந்தரமய்யர் அவர்கள் (கே. வி. ஐ.) வீட்டில் விவாகம் நடை பெற்றது. மேற்படி விவாகத்திற்கு நமது அய்யரைச்சேர்ந்த வகுப்பார் சமையல் சாப்பாட்டுக்கு இலைபோட்டு பரிமாறப்பட்டு போஜனஞ் செய்துக்கொண்டிருந்தார்கள். நமது அய்யர் மூக்குவைத்த

தூக்கு பாத்திரத்தில் சாம்பார் எடுத்து வந்தார். பந்தியில் உட்கார்ந்த ஒரு பையனுக்கு நமது அய்யர் எடுத்து வந்தது இன்னதென்று தெரியாததால் (ஓ! கர்ணம்) இங்கு கொண்டுவா வென அழைத்தான். பார்த்தார் அய்யர்;வந்தது கோபம்; அடா பாபமே! போதும் போதும் இத்தொழிலே வேண்டாம் கர்ணம் என்றபேர்போய் கோகர்ணம் என்றபேர் கிடைத்தது என நினைத்து உடனே தனது ஊர்போய்ச் சேர்ந்து, வேறு எந்தத் தொழிலைச் செய்யலாமென்று யோசனை செய்தார். மல்யுத்த பயிற்சிசெய்தால் நல்லவெகுமானம் கிடைக்குமென்று நினைத்து 'பழவூர் மல்யுத்தத்தில் பொன், வெள்ளி, தங்கம் பட்டயம் முதலியதுகள் பரிசுபெற்ற வீரஜெய பாலையாத் தேவர் அவர்களிடம் சென்று மல்யுத்தபயிற்சி செய்விக்கவேண்டு மென்று சொல்ல, அந்தத் தேவர் நமது அய்யரை உற்று நோக்கி அங்க லக்ஷணங்களெல்லாம் பொருந்தி வாட்டசாட்டமாக யிருக்கிறது என்று பரீக்ஷை பார்த்த பிறகு அந்தத் தேதிமுதல் சிக்ஷைகற்று கொடுத்து வந்தார். ஒருநாள் நமது அய்யரைப் பார்த்து குட்டி கர்ணம் போடச்சொன்னார். பார்த்தார் அய்யர்; விட்டார் வேலையை; அட விதியே! "வெறுங் கர்ணம் போய், கோகர்ணம் கிடைத்தது, இப்பொழுது அது குட்டி கர்ணமாகி விட்டது! என நினைத்து ஊர் வந்து என்ன செய்வதென்று தோன்றாமல் இருக்கும்போது ;ஒரு வைதீகர் அவ்வழியாகச் சென்றார். அதைப் பார்த்த நமது அய்யர் இந்தத் தொழில் செய்யலாமென்று நினைத்து, தினந்தோறும் அதிகாலையில் எழுந்திருந்து தாம்பிரபரணி நதிக்குச் சென்று தீர்த்தமாடி விபூதி, ருத்திராக்ஷ முதலியதும் அணிந்து சிவப் பழமானார். அவ்வூரில் பெயர் பெற்ற சுவாமிநாத கனபாடிகள் நமது அய்யரிடம் வந்து இன்றையதினம் நமது வீட்டில் ஸபிஸ்டி காணம் நடக்கிறது. தாங்கள் அதற்கு வரவேண்டுமென சொன்னார். அய்யருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அடா கிரகசாரமே! சாதாரண கர்ணம் போய் குட்டிகர்ணம் லபித்தது, அதுபோய் ஸபிஸ்டிகர்ணம் வாய்த்தது. ஆ ஹா! ஹா! பலே; பலே; தமாஷ்! இது நமக்கு சரிபட்டு வராதென நினைத்து வைதீகத்தை விட்டுவிட்டு, காவியம் படித்தால் நல்ல பண்டிதர் என்று பட்டம் பெறலாமென நினைத்தார். மாணிக்கம் என்ற ஊரில் தர்க்கம் முதலியதுகளில் தேர்ச்சிபெற்ற வித்வசிரோமணி பிரம்மஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் என்றவரிடம் சென்று சகல சாஸ்திரத்தை கற்று, பண்டிதரென்றும், வித்வானென்றும், மஹோபதேசனென்றும், கவிரத்ன மென்றும் பேரும் வகித்து தனது

ஊர்வந்து சேர்ந்தார். இவரது அடுத்த ஊராகிய முத்துவிஜய புரத்தில் சகலகலைக்கியானமும் கற்றுணர்ந்த பிரம்மஸ்ரீ சங்கர சிரௌதிகன் நமது அய்யரின் வித்வத் தன்மையை உத்தேசித்து அவரிடம் வந்து ஐயா! உமக்கு வியாகர்ணம் தெரியுமாவென்று கேட்டார்; இந்த சமயத்தில் நமது அய்யரை பார்த்தால் எப்படி யிருப்பாரென்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்! அடா விதிவசமே! பூர்வ ஜனன விசேஷமா? என்ன செய்வேன்! ஈசா அடடா அடா! கர்ணப்பேயே என்னை விட்டு அகலமாட்டாயா வென்று நொந்து மூர்ச்சையாகிவிட்டார். கொஞ்சம் நேரம் சென்று மூர்ச்சை தெளிந்து மூக்கில் விரலைவைத்து யோசனை செய்து கடைசியாக புரோகிதம் செய்வது நல்லதென்று நினைத்து அய்யாவவர் புரோகித தொழிலை பார்த்து வந்தார். அவ்வூரில் பிரபல தனிகரான தேசாபிமானியாகிய சுகுணசுந்தரம் பிள்ளை (எம். எ. ஐ. சி. சி) என்பவரின் குழந்தைக்கு நாமகரணம் செய்யுமாறு நமது அய்யரை அழைக்க அடடா! பிரார்த்த கர்மமே! எங்கே போனாலும் நம்மை விடாதுபோல் அல்லவா தோன்றுகிறது. இத்தொழிலைவிட்டு நாடகத் தொழிலே சரியென்று நினைத்து, கரிசூழ்ந்த மங்கலத்தில் நடந்து வரும் ஸ்ரீ ஆனந்தகான சபாவில் சென்று தனக்கு ஒரு வேஷம் தரும்படி கேட்டுக்கொண்டார். நான்காவது வருஷக் கொண்டாட்டத்திற்காக ஏற்படுத்தியிருக்கும் மஹாபாரதத்தில் நமது அய்யருக்கு விகர்ணன் என்னும் ஆக்ட் கொடுக்கப்பட்டது. என்னசெய்வார்! பாபம்! பழைய கர்மமே மேலென நினைத்து பழையபடி கிராமகர்ணம் வேலைபார்த்து ஈசன் கிருபையால் சகலபோக பாக்கியங்களை யடைந்து சுகமாக தனது வாழ்நாளை கழிக்கலானார், சுபம்!

நல்லுபதேசம்

ஒரு காரியத்தை முடிப்பதன் பொருட்டு ஒன்று கூடினால் பிறகு பிரிவதுகூடாது. கூடியவர்கள் கருத்தொருமித்து நின்று உறுதியாயுழைக்கவேண்டும். அபிப்பிராய பேதமுண்டானால் அதைப் பொருத்துக்கொள்ளல் வேண்டும். இடம் - பொருள் - ஏவல்களைச் செவ்வனே கவனித்தல் வேண்டும். அப்பொழுதுதான் மேற்கொண்ட காரியம் செவ்வனே நடைபெறும்.

:: காதல் மணம் ::

ஸ்ரீ. பி. நவநீதம் நாயுடு

(பொக்கிஷதார், ஸ்ரீ நடராஜசபை, வண்ணாரப்பேட்டை.)

தற்காலக் கல்வி

பண்டைக் காலத்தில் நம் நாட்டில் ஆணும் பெண்ணும் சமமெனக்கொண்டு அறிவிலோங்கி விளங்கி நாட்டை சிறப்பித்தனர். ஆனால், தற்போது அந்நிய ஆட்சியின் பயனாக அதற்கு மாறாக நவீன நாகரீகங்களில் ஈடுபட்ட கல்வியைப் பயின்று தாய்ப் பாஷையை பெரிதும் வெறுத்து பட்டம் பெறுகின்றனர். இப்பட்டங்கள் உண்மை யறிவையும், ஒழுக்கங்களையும், உலகஞானத்தையும் குறிக்கும் பட்டங்களாகாது. இவ்வாறு பட்டம் பெறுவதற்குள் சிறிய வகுப்புகளில் தவறி விடுபவர்கள் சிலர். ஆகையால் பட்டங்கள் பெறுவதற்குள் செலவழிக்கும் பணமோ அளவுகடந்துவிடும். இவ்வாறு செலவழித்துப் படித்து பி. ஏ. (கலாகுமாரன்) என்னும் பட்டம் பெற்றுவிட்டாலோ அவரது பெற்றோர் உற்றோர் அடையும் ஆனந்தம் அளவிடுதற்கரிது. பின்னர் பட்டத்திற்குச் சட்டம்மாட்டி பல்லோர் அறிய வீட்டில் மாட்டுவார்கள்.

பட்டம் பெற்று பணம் பறித்தல்

இவ்வாறு பட்டம் பெற்ற பின்பு வேலைக்காக பிரயாசைப்படுவோர் பெரும் பான்மையோர். வரதட்சிணை என்னும் வியாபாரத்தைக் கைகொள்ளுவோர் பலர். இவ்வழக்கம் சிறிதுகாலத்திற்கு முன் பிராமண சமூகத்திடையே மட்டு மிருந்தது. பின்னர் எல்லாச் சமூகங்களிலும் தொத்து வியாதிபோல் பரவ ஆரம்பித்து விட்டது. இது என்றைக்கு நம் நாட்டைவிட்டுத் தொலையும் என்றால் பட்டாதாரிகளின் மேல் மோகமும், ஆங்கில மொழியின் மேல் உள்ள அளவு கடந்த ஆவலும் என்றைக்கு நம் இந்தியாவைவிட்டு நீங்குமோ அந்த நன்னாளிலேயே; ஆனால் நம் நாட்டினரோ ஆங்கில மொழியும், ஆங்கிலர் ஒழுக்கமும் சதுர்வித புருஷார்த்தங்களையும் அளிக்கவல்லது எனக்கருது

கின்றனர். இவ்வரதட்சணைப் பேயால் பரிதவிக்கும் குடும்பங்கள் அளவிறந்தன. வெறும் பட்டங்களைக் கண்டு ஏமாறுமல் நல்ல அறிவும், போதிய அளவு கல்வியும், குடும்பத்தைப் போஷிக்கும் சக்தியுமுள்ளவர்களாயிருக்கும் எளிய வாலிபர்களுக்கு பெண்கொடுத்து, அன்புடன் ஸ்ரீதனமாக பணமிருப்போர் அளிப்பின் அதுவே நல்ல தர்மமாகும். அம்மணமே அன்பு கமழும் நல் மணமாகும். இதுவே வரதட்சணைப் பேயை ஒழிக்கும் வழியாகும். வெறும் பட்டத்திற்காகவும், பணத்திற்காகவும் செய்யப்படும் மணங்கள் உண்மை மணங்கள் ஆகாது. ஆகையால் காதலாகிய அன்பால் செய்யப்படும் மணங்களே இயற்கை மணமாகும். அதுவே இயற்கை இல்லறத்திற்கு ஏற்றதாகும்.

காதல் என்பது என்ன?

காதல் என்றால் சதிபதிகள் ஒருவரை ஒருவர் இச்சிக்கும் இயற்கையையுடைய அன்பு என்று பொருள்படும். இத்தகைய அன்பே சதிபதிகளிடை உயர்வு தாழ்வு கற்பிக்காமல் சமரசத்தை நிலைநிறுத்தும் தன்மையுடையது. இப்பூவுலகில் ஆண்களும் பெண்களும் ஒருவர்மீதொருவர் பரஸ்பர அன்பெனுங் காதல்கொண்டு உற்றதோர் துணைவனையும் துணைவியையும் அடைந்து இல்லறம் நடத்திவந்தால் கற்பின் நிலைக்கு ஒருபோதும் குறைவு ஏற்படாது. மேலும் காதல் என்பது தெய்வாசம்மதமான ஓர் அருளே யாகும். கடவுளால் படைப்பிக்கப்பெற்ற மானிடப் பிறவிகள் ஒற்றுமையுற்று வாழும் வண்ணம், காதல், அன்பு முதலிய குணங்கள் இயற்கையிலே அமையுந் தன்மையுடையன. காதலானது சதிபதிகள் ஒன்றுபட்டும், ஸமத்துவத்துடனும் வாழ்வதற்கு அபுரூபமான சங்கிலிபோன்ற பரஸ்பரஅன்பேயாகும். இத்தகைய காதலன்பு எங்கு மிகுந்து திகழ்ந்து விளங்குகின்றதோ அங்கே ஆனந்தம் பெருகித் தாண்டவமாடும், சமத்துவம் குடிகொண்டிருக்கும். காதலர்கள் வாழ்க்கையிலும் எதிர்பாராத மனச்சோர்வு நேரினும் அதை அதிகமாய் பரவாமல் காதல் முதிர்ச்சியால் அன்புபெருகி சோர்வை அறவே மாற்றுகிறது.

காதல் வேறு—காமம் வேறு

இப்பொழுது காதலென்பது பற்றிக் கூறினோம். இனிகாமம் என்பதுபற்றி ஆராயின், காமமென்பது உள்ளன்பின்றி மிருகத்தன்மையான சேர்க்கை உணர்ச்சியின் காரணமாக நிகழ்வதாகும். காமத்திற்குந்

கண்ணில்லை. காமம் மின்னலைப்போல் தோன்றி அழியக்கூடியது. காதலானது ஓரிடத்தில் படிந்து நிற்கக்கூடியது. காமம் பலபலவாறுதோன்றும் இயற்கையை யுடையது. காதல் கடவுள் அறமாகிய இன்பம். காமம் பேய்த்துன்பதாகும். காதல் உடல் வளத்தை அளிக்கும், காமம் உடல் நலத்தை அழிக்கும். காதல் நாளுக்குநாள் பெருகும். காமம் நாளுக்குநாள் அருகும்.

மணமுறைகள்

பண்டைக்காலத்தில் நம் நாட்டில் பெரும்பாலும் காதல் மணங்களே நிகழ்ந்து வந்தன. அம்முறை நம் நாட்டில் தற்போது அனுஷ்டானத்தில் இல்லாமையினால் அன்றோ வியபசாரமும், தற்கொலைகளும்,இன்னும்பல தீங்குகளும் நிகழ்கின்றன. உதாரணமாக நாம் மேல்நாட்டாரை எடுத்துக்கொள்வோம். அவர்கள் யுக்தவயது வந்த பிறகு ஆணும் பெண்ணும் உள்ளன்பாகிய மெய்க்காதலால் நேசித்துப்பின்னர் மணம் புரிகின்றனர். ஆனால் நம் நாட்டினர் மேல்நாட்டாரை பலவிதத்திலும் பின்பற்றியும், இப்புனிதமான திருமண முறைகளை மட்டும் பின்பற்றாமை வருந்தற்பாலதே. மேலும் நம் நாட்டினர் சிறு பிராயங்களிற் கலியாணம் செய்கின்றனர். அப்பொழுது தம்பதிகளுக்கு கலியாணம் என்றால் இன்னதென்றே தெரியாது. இதனால் ஏற்படும் கெடுதிகள் பல.

இயற்கை மணம் எது?

பண்டைக் காலத்தில் நம் நாட்டில் நிகழ்ந்த மணமுறைகளை சிறிது ஆராயின் தற்காலத்தியமுறைகளை சீர்திருத்த நமக்கு போதியஆதாரமும் துணிபும் ஏற்படுமென்பதிலையமில்லை. அக்காலத்தில் ஆணும் பெண்ணும் தத்தம் வேலைகளை வீட்டிலும் வெளியிலுஞ் செய்துவந்தனர். அங்ஙனம் செய்துவரும்நாளில் இல்லறம் நடத்தும் இயற்கை வயதடைந்த ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சந்தித்து குணநிசயங்களை ஆராய்ச்சி செய்து இசைந்தபின் பரஸ்பர அன்பெனுங் காதலால் கட்டுண்டு தத்தம் காதலைபொழுதுகண்டிரங்கல், நாணமற்று அறவுரைத்தல்தோழன்தோழியார் மூலமாகவும் ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொண்டு பின்னர் தாய்தந்தையர் அனுமதிபெற்று மணம் நடத்தி வந்தனர். இடைக்காலத்தில் முகம்மதியர்கள் ஆட்சியில் பெண்கள் வீடடங்கும் வழக்கம் ஏற்பட்டது. இந்நாட்களில் ஆண், பெண் இருவரும் சந்திப்பதற்கில்லை, ஆகையால், தோழர்இனமுறையார்களாலும்பார்வையிடப்பட்டு இருவரும்

இணங்கியபின் திருமணம் நடைபெற்று வந்தது. இத்தகைய மணமே காதல் மணம் எனப்படும். ஈருயிரை ஒன்றுபடுத்தி இல்லறத்தில் இன்புற்று ஈடுபடச் செய்யும் இயற்கை மணமாகும்.

காதல் மணத்தின் மேன்மை

உதாரணமாக நாம் சாவித்திரியின் சரித்திரத்தை சான்றுரைப்போமாயின் சாவித்திரி தான் காதலித்த சத்தியவானையே மணக்க மனத்திடங்கொண்டு அவனையே மணந்து பின்னர் எமனுடன் வாதம் செய்து தன் கணவன் உயிரை மீளப்பெற்று கற்பிற்கரசியாய் விளங்கியது காதல் மணத்தின் மேன்மையாலன்றோ? நிற்க நளனுக்கும் தமயந்திக்கும் ஓர் அன்னம் தூது சென்றதாக நைடதத்தில் உள்ள தூது விடு படலம் கூறுகின்றது. நளன் தமயந்தியை தனியே காட்டிடைவிட்டகன்றபின் ஓர் கொடியவேடன் கெட்ட எண்ணங்கொண்டு கற்பழிக்க முயன்றபொழுது பலவாறு நன்மொழிகள் சொல்லியுங் கேளாது தீங்கிழைக்க முயன்றபொழுது தமயந்தி கொடுத்த சாபத்தினால் அவ்வேடன் மாய்ந்தது காதல்மணத்துதித்த கற்பின்மேன்மையன்றோ? அரசர் குழாங்களிலும் சுயம்வரம் (புருஷனை தெரிந்தெடுக்கும் சுதந்திரம்) எனும் வழக்கம் இருந்து வந்தது. நம் நாட்டில் தற்போதுநிகழும் மணமுறைகள் சற்றும் பொருத்தமில்லாதனவேயாம். மணமொத்த மணங்கள் நிகழ்வதில்லை. மனதிசைந்த காதலர்களே தாங்கள் இருவரும் சதிபதிகள் ஆகின்றோம் என்று அக்னிசாட்சியாகவும் உற்றோர் உறவினர்கள் முன்னிலையில் உறுதிசெய்வதனடையாளமாக திருமங்கல்யம் கட்டுவது பண்டைகாலந்தொட்டே வழங்கும் வழக்கம்.

போலி மணங்கள்

உண்மை மணத்தின் கொள்கைகள் இவ்வாறிருக்க தற்போது பலர் வயோதிகர்களுக்குப் பணமிருப்பின் பெண்கொடுக்கின்றனர். இப்படி பணத்திற்காகவும், வெறும் பட்டத்திற்காகவும், மோகங்கொண்டு செய்யப்படும் மணம் முறண்பட்ட மணங்களாகும். பல்லோரும் பட்டதாரிகளை நாடுவதினால் அவர்கள் அதிக வரதட்சணை வரும் இடத்தையே விரும்புகின்றனர். பட்டதாரிகட்குப்பெண்கொடுத்தால் அவர்கள் சீக்கிரம் நல்ல உத்தியோகம் பெற்று நல்ல நிலமைக்கு வருவார்களென்ற கொள்கை. ஆனால் அவர்கள் வரதட்சணை சீர் முதலானவை

போதாதென்றும் ஏனைய நண்பர்களுடைய வரதட்சணையைப் பார்த்து இருமாப்பு கொண்டு ஒருபாவமும் அறியாதகங்கையரையடிக்கின்றனர், அடித்தும், இழிவு சொல் பேசியும் கண்ணீர் விடும்படி செய்கின்றனர். இவையெல்லாம் முறண்பட்ட மணமாகும். இம்மணத்தால் காதல் ஏற்படாது. இப்படிப்பட்ட வரதக்ஷிணையின் செயற்கை சதிபதிகளிடை ஒற்றுமை அன்பு முதலியன எவ்வாறு தோன்றும் என்பதை நேயர்களே யூகிப்பார்களாக.

குறிப்பு:—காதல் மணத்தின் மாண்பை விரிவாகவும், தெளிவாகவும் அறியவேண்டுமானல் காதல் வாழ்க்கையின் மர்மங்கள் அல்லது மதனுகமலீலை என்னும் புஸ்தகத்தை வாசிக்கவும் எட்டு அழகிய படங்களுடன் விலை ரூபா-2. விவேகபாநு ஆபிசில் கிடைக்கும்.

:: தாம்பூல தாரணம் ::

(டாக்டர் அஹ்மத் எழுதுகிறார்)

முன் தொடர்ச்சி.

செருமல் வஸ்துக்களும் இவ்விதமே உண்டாகின்றனவென்று அவர் சொல்லுகிறார். ஆகவே, கிலிப்தமாகத் தாம்பூலதாரணம் செய்கிறவர்கள் சுண்ணும்பு சரீரத்தில் அதிகமாகச் சம்பந்திக்கும்படி செய்து கொள்ளுவதால் ரத்தக் குழல்களில் சுண்ணும்பு சம்பந்தம் அதிகமாக ஏற்படும்படி செய்து கொள்ளுகிறார்களென்றும், இது பற்களில் செருமல் ட்டார்ட்டராகச் சேருகிறதென்றும் வைத்துக்கொள்ளுவது உசிதமாகும். பற்களினிடுக்குகளில் தங்கிவிடும் வெற்றிலை நரம்புகள் அடிக்கடி எரிச்சலை உண்டுபண்ணுவதும், பற்களின் வேர்களில் செருமல் கால்குலஸ் தங்குவதும் பற்களின் வேர்களுக்கும் அவற்றின் பைகளுக்கும் இடையேயுள்ள பற்களின் ஜவ்வை அழித்துவிடுகின்றன. நாளடைவில் சீழ் உண்டாகி, அந்தச் சீழானது அந்தப் பையின் எலும்புச் சுவரை அழித்து விடுகிறது. இவ்விதமாக பற்கக் கிருந்துவரும் ஆதாரமே அழிந்துபோய், அவைகள் அன்னிய வஸ்துக்கள்

போல் கீழே விழுந்துவிடுகின்றன. இவ்விதமாகத் தாம்பூல தாரணம் செய்வதால் பற்களின் அடியிலுள்ள ஐவ்வில் எரிச்சல் ஏற்பட்டு, முடிவில் அது அழிந்து விடுகிறது. இதர தேசங்களைவிட இந்தியாவில் பற்களினிடுக்குகளிலிருந்து சீழ் வடியும் வியாதி அதிக வியாபகமுடையதாக இருப்பதற்கு இதுவே காரணம். இந்தியமகா ஜனங்களுள் 100க்கு 90 பேர்கள் தாம்பூல தாரணம் செய்கிறார்கள். சிலர் ஒருநாளைக்கு 100, 200 வெற்றிலைகளைப் போட்டுக்கொள்ளுகிறார்கள்; மற்றும் சிலர் தினம் 10, 15 வெற்றிலைகளை உபயோகிக்கிறார்கள். மொத்தத்தில்இந்த வழக்கமானது சர்வ சாதாரணமாக இருந்து வருகிறது.

இதனால் ஏற்படும் நிலைமையை ஊன்றிக் கவனித்துவந்திருப்போருக்குப் பற்களின் மிருதுவான தசைகளை தாம்பூலமானதுஎவ்விதம் அழித்து பற்களில்காவி ஏறி விடுகிறது, பற்களின் மென்னியானது வாயூறல்ட்டார்ட்டரால் வெட்டப்பட்டு விடுகின்றது. ஈறு இறங்கிப்போய் விடுகிறது. பற்களின் அடியிலுள்ள பூச்சு (மூலாம்) அழிந்துபோய் விடுகிறது. பற்கள் சீழின்மேல் தங்கியிருக்கிறன இந்தச் சீழில் ஒரு பாகமானது விழுங்கப்பட்டும் விடுகிறது. மற்றொரு பாகம் நிணநீருடன்சேர்ந்து விடுகிறது. பற்களினிடுக்குக்களிலிருந்து சீழ் வடிவதற்குத் தாம்பூல தாரணமே காரணமென்று இந்தியாவிலுள்ள பல்வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்திய மகா ஜனங்களில் வயதடைந்தவர்களுள் 100க்கு 70, 80 பேர்கள் இந்தவியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்விதம் தாம்பூல தாரணம் செய்து கொள்ளும் வழக்கத்தை நிறுத்தும் பிரசாரத்தில் பல்வைத்தியர்களும் ஈடுபடின் விசேஷ அபிவிருத்தியை உண்டுபண்ணலாம். இது எல்லாமுக்கியமான சீர்திருத்தங்களையும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது கஷ்டம்தான். ஆயினும், ஒரு கெட்டவழக்கத்தைத் தடுக்கும் வேலையில் ஈடுபடுவதை அதுகாரணமாக வைத்தியர்கள் நிறுத்திக்கொண்டு விடுவதற்கில்லை. இந்த வழக்கம் நெடுங்காலமாக ஏற்பட்டிருந்த போதிலும், இதை பரவவிடாது குறைப்பதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். நான் தாம்பூல தாரணத்தை ஒழிப்பதற்காக முகவும் சிரமப் பட்டிருக்கிறேன். இதனால் சிறிது பலனும் கிடைத்திருக்கிறது. பல குடும்பங்கள் தாம்பூல தாரணத்தையே விட்டிருக்கின்றன. வேறுசிலர் இந்தவழக்கத்தைக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு வைத்தியரும், ஒவ்வொரு பல் வைத்தியரும் தாம்பூல தாரணத்தால் ஏற்படும் கெடுதலைப் பற்றிப்

பிரசாரம் செய்துவரின், பற்களினிடுக்குகளிலிருந்து சீழ்வடியும் வியாதியின் வியாபகம் இந்தியாவில் மிகவாகக் குறையும்.

ஜனங்களுடைய தேக வன்மையைப் பெருக்கவும் வியாதிகளை எதிர்த்து நிற்பதற்கு அவர்களுக்குச் சக்தி ஏற்படும்படி செய்யவும், ஜனங்களுடைய இந்த இந்திய வழக்கத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. தாம்பூல தாரணம் அதிகமாகச் செய்வதனலேயே நாக்குகளிலும் கன்னங்களிலும் பின்னங்கள் ஏற்படுகின்றது. அஜீரணமும் வயிற்றுப் போக்கும் இதனலேயே ஏற்படுகின்றன. சரீரத்தில் ஏற்படும் இதர பல வியாதிகளுக்கும் இவ்வழக்கமே மூலகாரணமாக இருக்கிறது.

ஜனங்களுடைய சரீர வன்மையைக் குறைத்துவரும் இக்கொடிய பழக்கத்தின் வியாபகத்தைக் குறைக்கும் இயக்கத்தில் சாதாரண வைத்தியர்களும் பல் வைத்தியர்களும் ஈடுபடின், அவர்கள் இந்தியாவுக்குப் பரம உபகாரம் செய்தவராவார்கள். தாம்பூல தாரணம் அதிகமாகச் செய்வது வைதிக தர்மத்துக்கும் விரோதமானது. பற்களுக்கும் அதிக வேலை ஏற்படுகின்றது. வாய் சிவந்து போகும்படி இதுசெய்து விடுகிறது. இந்த வழக்கத்தை அப்பியஸித்துக் கொண்டிருக்கிறவர்களிடம் பிறருக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்படுவதில்லை. தாம்பூல தாரணத்தினல் பற்களினிடுக்குக்களிலிருந்து சீழ் வடியும் வியாதி இந்தியாவில் அதிக வியாபக முடையதாக இருப்பதனலேயே மரண விகிதமும் இத்தேசத்தில் அதிகமாக இருக்கிறதென்று சொல்வது மிகையாகாது. ஜனங்களுடைய ஆரோக்கியத்தை மிக வாகப் பாதித்து வரும் இந்தக் கொடிய வழக்கத்தை ஒழிக்கும் துறையில் ஈடுபட வேண்டியது இந்தியாவிலுள்ள வைத்தியர்களின் முக்கியக் கடமையாகும்.

ஆரோக்கிய தீபிகை

:: வஞ்சகன் ::

புதுவை மு. மாணிக்க நாயகர் எழுதுவது

நேரிசை - வெண்பாக்கள்.

கள்ளன் பிறருயர்ச்சி கண்டு மனஞ்சகியா
னெள்ளிப் பிறரை யிகழ்ந்துரைப்பான்—உள்ளம்
விடம்போலக் கொண்டு வெளிக்குக் கனிச்சொற்
றிடமுறச் சொல்வானைத் தீர். (1)

பிழையொன் றிலாரைப் பிழையுள்ளார் போலப்
பிழைபடக் கூறும் பிழையன்—விழைந்தவனைப்
பற்றும் பிழைமுற்றும் பாரிடத்தோர் கண்டுசொல
முற்றும் பிழைபுரிவான் முன். (2)

இல்லாத தொன்றை யியம்பிடுவா னென்றென்றும்
நல்லார் பழிக்கும் நலமிலான்—மெல்லக்
கலகம் படைத்துக் கடுநட் பினர்கள்
கலவா திருக்குமுறை கண்டு. (3)

உரைத்திடுவன் மாற்ற முரியவர்கண் டுற்றால்
உரைத்திடுவ "னில்லை யுண்மை"—மடுத்தவனை
யார்த்திடு நண்ணறிஞ ரன்புநிறை கோட்டிதனிற்
சேர்ப்பதுண்டோ நண்ணிடையாய் தேர். (4)

செருக்கிற் பெருத்தொளிர்வன் செய்கைச் சிறியன்
தருக்கம் புரியத் தயங்கான்—கருத்தினில்வன்
சேருசூ ழெண்ணங் கிளைகிளையாக் கொண்டுமிகத்
தேடுவன்மே னேயமைத் தீர். (5)

அமட்டல்; பிறர்மதிப்பை யழிக்குங் குணத்தாற்
றமுக்கின் முழக்கு தகையன்—சிமிழ்த்துரைப்பன்
மற்றவர்தஞ் சொல்லை மறுத்துரைக்குந் தந்திரத்தை
யுற்றவழி கண்டுமனம் ஒய்ந்து. (6)

வஞ்சகனுக்கும் பாம்புக்கும் சிலேடை

அமுதங் கொடுப்பார்க் களிக்கும் விடத்தைக்
குமுதம்போற் செவ்வாய்க் குலக்கொடியே—வமரும்
மனத்துட் கரவட மாணடிக் கச்சம்
இனத்துட் சுழலும் இவை. (7)

நன்மைப் பிறர்க்கென்றும் நாட்டுங் குணமொன்றே
யின்மை யெமக்கென் றிருக்கும்—வன்மக்
கடுமை வளர்க்குங் கவின்செய் புரகங்
கடுக்குமொரு வஞ்சகனைக் காண். (8)

விதவா விவாக சகாய சபை

சென்னை. நா. சின்னையன் எழுதுவது

இது வடநாட்டின் கண்ணுள்ள லாகூர் விதவா விவாக சகாய சபையின் ஓர் கிளைச் சபையாகும். காலம் சென்ற Sir. லாலா கங்கா ராம் அவர்கள் நமது இந்து சமூகத்தின் சீர்க் கேட்டிற்கு நம்பெரும் பாலரான இளமங்கையர்கள் தமது சுயநலங்களை அனுபவிக்க முடியா மல் அல்லும்பகலும் அலறிவடிக்கும் கண்ணீரேக்காரணமெனத் தெளிந் து அதைத் தன்னால் கூடியவரையில் தீர்த்து நமது இந்து சமூகத்திற்கு உதவவேண்டு மென்னும் ஓர் உயர்குண விருப்பினால் அதற்கு வேண் டிய மூலதனம் உதவிகூடி லாகூர் விதவா விவாக சகாய சபையை நிரு மானித்தார். அச்சபையின் கொள்கைகளும் அதனின் பொதுநல ஊழி யங்களையும் பெரும்பாலோர் அறிந்திருப்பரென நினைக்கிறோம்.

நிற்க, இக்கிளைச் சபை இச்சென்னை மாகாணத்தில் கனம் ஸ்ரீமான் Justice M. வெங்கடசுப்பராவ் அவர்களின் தலைமையில் ஸ்தாபிக்கப் பட்டு சுமார் 2-வருடங்களாகின்றது. தற்சமயம் இதனின் காரியாலயம் நெ. 161. பிராட்வே மதராஸில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஸ்ரீமான்களான அ. குமாரசாமி செட்டி, T. V, பகவத் B. A, B. L., Advocate அவர்கள் கௌரவக்கூட்டுக் காரியதரிசிகளாக தேர்ந்தெடுக் கப்பட்டிருக்கின்றனர். இதுவரையில் இச்சபையில் சுமார் 100-அங்கத் தினர்கள் சேர்ந்திருக்கின்றனர். இதுவன்றி சுமார் 220 புருஷர்களும் 55-ஸ்திரீகளும் இச்சபையின் மூலமாய் மறுமணம் செய்துக்கொள்ள விரும்பிச் சேர்ந்திருக்கின்றனர். இவர்களில் மணமானவர்கள் நீங்கலாக இன்னும் 155 புருஷர்களும் 18 ஸ்திரீகளுமிருக்கின்றனர். இவர்களின் மணங்களுக்கு வேண்டியப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

தற்சமயம் இக்காரியாலயத்தின் செலவுகளுக்கு தலைமை ஆபீஸ் லாகூரிலிருந்து சிறிது பணமே உதவப்படுகின்றது. அதனால் யான் இன் னும் இதன் ஊழியத்தை விசாலப்படுத்த முடியாம லிருக்கின்றோம். மேலும் இச்சபையின் அங்கத்தினர்களுக்கு மாதச்சந்தாவை ஏற்படுத்த வில்லை. வருஷசந்தாவாகவும் வருஷம் ரூபா 1-க்கு குறையாமல் அவ ரவர்களின் பிரியம்போல் எவ்வளவேனும் செலுத்தலாம் என்று நிரு மானித்திருப்பதாலும் தக்க வருமானம் இல்லாமலிருக்கிறோம்.

இச்சபையின் அபிவிருத்தியை முன்னிட்டும், நம்மிந்து பால்ய விதவைகளின் துயரத்தை குறைப்பதை முன்னிட்டும் யாம் இச்சென்னையின்கண் ஓர் விதவா ஆசிரமம் (Vidou's House) நிருமாணிக்க அவாவுறுகின்றோம். ஷை ஆசிரமத்தில் மணம் செய்துகொள்ள விருப்பமுள்ள விதவைகள் வந்துத் தங்கவும், அவர்கள் மணம் செய்துகொள்ளும் வரையில் அவர்களுக்கு வேண்டிய ஊண், உடை முதலிய சௌகரியங்களைச் செய்யவும் விரும்புகின்றோம். இவ்வாசிரமம் ஏற்படுவதினாலுண்டாம் நலம் சிறிது ஆழ்ந்து யோசிப்போர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்குமென நம்புகிறோம். இவ்வுத்தம கைங்கிரியத்திற்கு நாம் பொது ஜனங்களின் ஆதரவையும், அன்பையும், ஒற்றுமையையும், வேண்டுகின்றோம். மகா ஜனங்கள் எமது சபையில் அங்கத்தினர்களாக சேரவும் ஷை விதந்து ஆசிரமத்திற்கு வேண்டிய தங்களால் கூடிய பொருளுதவியும் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சில நன்மொழிகள்

(நன்மொழியாளன்)

அறம் எல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது. அதனை எல்லோருஞ் செய்யலாம். ஒவ்வொருவரும் தம்மாலியன்ற தருமத்தைச் செய்யலாம். (தருமமே தலைகாக்கும்)

பொறுமை எக்குணங்களிலுஞ் சிறந்தது. பொறுத்தலைமேற்கொள்வது அருமை. பிறர் கடுமையாகப் பேசும்போது நாமும் கடுமைகொள்ள நேரும். அப்போதுதான் அங்ஙனமின்றிப் பொறுமையோடிருக்க வேண்டும்.

எல்லா வார்த்தைகளிலும் இன்சொல் முதன்மையானது. காயும் கனியும் கிடைத்தவிடத்துக் காயைத் தள்ளிக் கனியை யுட்கொள்வது போல் நம் மனதில் அமைந்திருக்கும் வன்சொற்களை நீக்கி இன்சொற்களையே புகலவேண்டும்.

கடுங்கோபம் யாவற்றையும் மறைத்துத் தன்னை வெறியனாகச் செய்துவிடுகிறது. அதனால் அறிவுள்ளவன் அவசியம் கோபம் வரும்போது நிதானிக்கவேண்டும்.

தற்காலம் உலகம் இருக்கும் நேர்மையைப் பார்த்து அநியாயவழியிற் கூடியவரையிற் கலவாமல் நியாயவழியை பின்பற்ற முற்படல் வேண்டும்.

கேவலம் பயத்தையே கொண்டிருப்போர் இவ்வுலகத்தில் யாதொன்றையும் சாதிக்குந் திறனற்றப் போகின்றனர்.

கூலிதரும் வேலை யிருக்கும்போது செய்யாமல் சோம்பேரியாய்த் திரிபவர்களைப் பார்க்கிலும் பயனற்றோர் வேறியாவராவர்.

மனம் எதற்கும் ஆசைப்படும். அதன் வழி நாம் செல்லல் தவறு. நம்வழி மனதைத் திருப்பிக்கொண்டுவரப் பழகுதல் வேண்டும். (மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்) எத்தகையோர் கல்வியும் பிரசங்கமும் துஷ்டர்கள் முன்னிலையில் பயன்படாது.

ஒவ்வொருவரும் கடவுட் பக்தியிற் பொருந்த ஒவ்வோர் வழியைப் பின்பற்றவேண்டும்.

:: செய்தித் திரட்டு ::

பாரதி பாடல்கள்

இப்பாடல் புத்தகம் பறிமுதல் செய்யப்பட்டதன் சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது ஹைகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாகச் சென்னை சட்டசபையில் ஓர் அவசரப் பிரேரணை கொண்டு வரப்பட்டு நிறைவேறியது.

* * * *

பத்திரிகைகளுக்கு வாய்பூட்டு

"பிரஜாமித்திரன்" என்ற மைசூர் தினசரிப் பத்திரிகை வெளியிடப்படுவதி னின்றும் தடுக்கப்பட்டிருக்கிறது. "அல்கலாம்" என்ற உர்து பத்திரிகை வெளியீடுகள் பல "மைசூர் அரசாங்க ஊழியத்தின் மேல்" என்ற வார்த்தைகளுடன் தபால் விலையின்றி அனுப்பப்பட்ட விஷயம் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

* * * *

மலை விபத்து

ஸ்விட்ஜர்லாந்தைச் சேர்ந்த மாட்டோ ஆர்பினே என்ற இடத்தில் மலையின் ஒருபகுதி கீழ் விழுந்துவிட்டதாம். இப்பகுதி ஒரு சதுரமைல் பரப்புள்ளதாம்.

* * * *

புத்திர உற்பத்தி தடை மசோதா

பொதுஜனப் பாதுகாப்புக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய நபர்களுக்குக் குழந்தைகள் உண்டாகாதிருக்கச் செய்ய ஒரு மசோதா டென்மார்க் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

* * * *

போலீஸாரும் கம்பியில்லா தந்தியும்

உளவு கண்டுபிடிப்பதற்கும் மற்றவிஷயங்களுக்கும் போலீஸாருக்கும் போலீஸாருக்கு அநுகூலமாயிருக்க ஸிலோன் அரசாங்கத்தார் போலீஸ் இலாகாவுக்குக் கம்பியில்லாத் தந்திச் சாதன மளிப்பதைப் பற்றி யோசனை செய்து வருகின்றனர்.

* * * *

பெண் நீதிபதி

இரங்கூன் ஹைக்கோர்ட்டில் உதவி ரிஜிஸ்ட்ராயிருந்த ஒரு பர்மிய மாது ஒரு ஜில்லாவில் உதவி நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றனரும்.

கடிதம்

"விவேகபாநு" ஆசிரியர் அவர்கட்கு

அன்புள்ள ஐயா!

அஞ்ஞான இருளை நீக்கி ஞானம் பிரகாசிக்கச் செய்ய வல்லதானத் தங்கள் "விவேகபாநு" மனதை மகிழ்விக்கின்றது. நலம் குலைந்திருக்கும் தமிழரசிப் புத்துயிர்பெற்று மீண்டும் ஆதிக்கம்பெறத் தாங்கள் உழைத்து வருவதுப் பெரிதும் போற்றத்தக்கதே. சுயநலம் கருதாது பரோபகாரச் சிந்தனையுடன் தமிழ் மக்களின் முன்னேற்றத்தையும், நாட்டின் நலத்தையும் கருதித் தாங்கள் செய்துவரும் ஊழியம் இனிது நடைபெற எல்லாம் வல்ல இறைவன் அருளை வேண்டி நிற்கும்.

சென்னை தங்கள்:

(9-10-28.) ஆர். நாகராஜன்.

விடுகவி

இலக்கம்-1. —— (புதுவைக்கிழார்)

அப்பாகே ளொன்கெழுத்தா லான தோர்சொல்
லறைந்திட்டா ரதன்பொருளு மிரண்ட மென்றே;
ஒப்பாயொன் றுடனிரண்டு நான்குங் கூடி
லோர்ந்திடுமோர் பிணமென்றே யுரைக்க லாகும்;
செப்பவரு மிரண்டுமூன் றுஞ் செறிந்த நான்குஞ்
செகமதிலோர் திருமணமார் செல்வ னாகும்;
எப்போதும் விடுகவிக்கே விடைக ளீயு
மென்னன்பீ ரிதன்பொருளை யியம்பு வீரே.

குறிப்பு:—இவ்விடுகவி வினவுக்கு விடை எழுதும் ஒவ்வொருவரும் "விவேகபாநு"வின் சந்தாதாரராகவே இருத்தல் வேண்டும். சந்தாதாரர் விடை யெழுதும்போது விடையுடன் தங்கள் சந்தா நம்பரைக

குறிப்பிடல் வேண்டும். சந்தாதாரரல்லாதவர்கள் விடை எழுத விரும்பின் விடையுடன் இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். கிடைக்கும் விடைகளைப் பரிசோதித்து சரியான விடைவரும் முதல் இருவருக்கு கீழ்கண்ட பரிசு அனுப்பப்படும்.

முதல்பரிசு கானாஞ்சிதம் என்ற நாவலும், இரண்டாவது பரிசு மகாலக்ஷ்மி என்ற நாவலும் கொடுக்கப்படும்.

ஆசிரியர் தீர்மானிப்பதே முடிவானது, இது சம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகள் வைத்துக்கொள்ளப்படமாட்டா 25-11-28 க்குள் விடை நமக்குச் சேரும்படிச் செய்தல் வேண்டும் பரிசோதனை நாள் 30-11-28 ல்

"விவேகபாநு" மாலை-1. மலர்-3 ல் வெளிவந்த விடுகவி வினவுக்கு சரியான விடையளித்தவர்கள். (விடை—குதிரை)

1-வது பரிசுபெற்றவர் — A. மூத்தையா பிள்ளை
ரைஸ்மில், சின்னமனூர்.

2-வது பரிசுபெற்றவர்:— த. பொ. கார்த்திகேசு
கிணியா, திரிகோணமலை, (கொழும்பு)

வியாபாரிகளுக்கோர் விண்ணப்பம்!

தக்கசமயம்! மிக்கலாபம்!!

விளம்பரஞ்செய்ய நல்ல தருணம்!

இந்தியா, பர்மா, சிலோன், பினங்கு, சிங்கப்பூர், மலாய் நாடுகள், தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் ஏராளமாய் இச்சஞ்சிகையுலாவ ஆங்காங்கும் ஏஜண்டுகளை வைத்து இச்சஞ்சிகையை நடத்துவதால், வியாபாரிகள் இதில் விளம்பரஞ் செய்து மிக்க லாபத்தை அடைவார்களாக. வியாபாரத்தில் ஊக்கமுள்ளவர்கள் தங்கள் விளம்பரங்களை நமக்கனுப்பி, பிரசுரிக்கச் செய்வீர்களென நம்புகிறோம்.

விளம்பர விகிதம்

மாதம் 1-க்கு ஒரு பக்கத்திற்கு		ரூபா	8	0	0
,,	அரைப்பக்கத்திற்கு	ரூபா	5	0	0
,,	கால்பக்கத்திற்கு	ரூபா	3	0	0

எப்போதும் விளம்பரத் தொகையை முன்பணமாகவே கட்டவேண்டும். நீண்டகாலம் விளம்பரஞ் செய்பவர்களுக்குச் சகாயஞ் செய்யப்படும்.

மானேஜர்—"விவேகபாநு" ஆபீஸ்,
நெ. 20, நம்மாள்வார் தெருவு, முதல் சந்து,
சௌகார்பேட்டை, சென்னை.

விவேகபாநு பஞ்சாங்கம்

விபவஸூ ஐப்பசிமீ

கலியுகாதி—5030, சாலிவாகன—1851, பசலி—1338,

ஹிஜிரி,—1348 கொல்லம்—1104.

இங்கிலீஷ் 1928 — அக்டோபர், நவம்பர்மீ

தமிழ் தேதி		இங்கிலீஷ் தேதி	வாரங்கள்	திதிகள்	நட்சத்திரங்கள்	விசேடகாலங்கள்
1		17	புதன்	சது 57-6	அனு 44-1	முகூர்த்தநாள்
2		18	வியா	பஞ் 60-0	கேட் 50-20	ஆயுத பயிற்சிசெய்ய
3		19	வெள்	பஞ் 2-2	மூல 56-18	பூமுடித்தல்
4		20	சனி	சஷ் 6-34	பூரா 60.0	யோகஞ்செய்ய
5		21	ஞாயி	சப் 10-10	பூரா 1-23	கர்ப்பாதானம்
6		22	திங்கள்	அஷ் 12.39	உத்ரா 5.24	சரஸ்வதி பூஜை
7	அக்டோபர்மீ	23	செவ்	நவ 13-55	திரு 8-16	நாமகரணம் செய்ய
8		24	புதன்	தச 13-53	அவி 9.52	நந்தவனம் வைக்க
9		25	வியா	ஏகா 12.34	சத 10-14	மருந்து செய்ய
10		26	வெள்	துவா 10-8	பூர 9-25	பிரை தோஷம்
11		27	சனி	திர 6-40	உத்தி 7-43	தேவதா பிரதிஷ்டை
12		28	ஞாயி	ச 2.24○55.2	ரேவ 5-10	பௌர்ணமி
13		29	திங்க	பிர 51-54	அசு 1-56	கிரகப்பிரவேசம்
14		30	செவ்	துதி 46-6	* கிரு 54-8	கிருத்திகை
15		31	புதன்	திரு 40-12	ரோ 50-0	
16		1	வியா	சது 34-23	மிரு 45-59	
17		2	வெள்	பஞ் 28-53	திரு 42-21	
18		3	சனி	சஷ் 23-51	புனர் 39.12	
19		4	ஞாயி	சப் 19-25	பூச 36-42	
20		5	திங்	அஷ் 15-47	ஆயி 35-5	
21		6	செவ்	நவ 13-11	மகம் 34-30	
22		7	புதன்	தச 11-43	பூரம் 35.9	
23	நவம்பர்மீ	8	வியா	ஏகா 11-32	உத்ர 36-53	சாந்தி செய்ய
24		9	வெள்	துவா 12.35	அஸ் 39-57	முகூர்த்தநாள்
25		10	சனி	திர 14-59	சித் 44-10	சதுர்த்தசி ஸ்நானம் தீபாவலி
26		11	ஞாயி	சது 18-30	சுவா 49-22	அமாவாசை கேதாரிவிரதம்
27		12	திங்க	அமா 22-56	விசா 55-23	மந்திரஞ் செபிக்க
28		13	செவ்	பிர 27-59	அனு 60-0	சஷ்டி உற்சவாரம்பம்
29		14	புதன்	துதி 33-.1	அனு 1-44	சூளைவைக்க
30		15	வியா	திரு 38-13	கேட் 8.4	விருக்ஷாதிகள் வைக்க

	குரு	ராகு	செ
	2-வி-சு 18-து-பு 27 சா-ப பு		
	சனி கே	சூ-சு	பு

PRINTED AND PUBLISHED BY T. C. NAIDU, AT MURAHARI PRESS,
20, NAMMALWAR STREET, 1ST LANE, SOWCARPET, MADRAS.
Editor— S. K. GOVINDASWAMY PILLAI.